விலை: 50.00
பக்கங்கள் : 16
website : www.valampurii.lk
viber : 076 636 3378
Registered as a Newspaper in Srilanka

# வலம்புரி
Valampurii


E-mail: valampurii@yahoo.com
சங்கு 24
ஒலி 248 வள்ளுவர் ஆண்டு 2054 ஆவணி 07 வியாழக்கிழமை (24.08.2023) தொலைபேசி 222 3378, பக்ஸ் 222 7829

கல்யாண மாலை
சர்வதேச இலவச திருமண சேவை

T.P: 021 720 1005
இல.144,
பிறவுண் வீதி,
யாழ்ப்பாணம்.
kalyanamalai.jaffna@gmail.com
4000/= மட்டுமே

# வடக்கின் அபிவிருத்திக்கு அதிகபட்ச ஆதரவு

## யாழில் அமெரிக்கத் தூதுவர்



(யாழ்ப்பாணம்)

வட மாகாணத்தின் அபிவிருத்தி செயற்பாட்டுக்காக அதிகபட்ச ஆதரவை வழங்கவுள்ளதாக இலங்கைக்கான அமெரிக்கத் தூதுவர் ஜூலி சங் வட மாகாண ஆளுநரிடம் உறுதியளித்துள்ளார்.

(15ஆம் பக்கம் பார்க்க)

## நிலவில் கால்பதித்த சந்திரயான் 3

### இந்தியா சாதனை




(புதுடில்லி)

இந்தியாவின் 'சந்திரயான்-3' விண்கலத்தின் விக்ரம் லேண்டர் சந்திரனின் தென் துருவத்தில் வெற்றிகரமாக தரையிறங்கியது.

சந்திரயான்-3 லேண்டர் நிலவில் தரையிறங்கும் நிகழ்வை, தென்னாபிரிக்காவில் இருந்து பிரதமர் மோடி நேரலையில் 15

# அடுத்த வருடம் தேர்தல் நடைபெறும்

## ஜனாதிபதி ரணில் தெரிவிப்பு



(கொழும்பு)

அடுத்த வருடம் தேர்தல் நடைபெறும். எந்தத் தேர்தல் முதலில் நடைபெறும் என இப்போது கூற முடியாது. ஆனால் அடுத்த வருடம் தேர்தல் நிச்சயம் நடைபெறும் என ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தெரிவித்துள்ளார்.

(15ஆம் பக்கம் பார்க்க)

## திருமலை நீலியம்மன் கோயில் வளாகத்தில் புதிதாக பௌத்த விகாரை

(திருகோணமலை)

திருகோணமலையில் ஸ்ரீ மலை நீலியம்மன் கோயில் அழிக்கப்பட்டு கோவில் வளாகத்திலேயே பாசனப்பபாத ராஜமஹா விகாரை என்கிற பௌத்த விகாரை அமைக்கப்பட்டு இருக்கிறது

2007ஆம்ஆண்டு கோவில் வளாகத் 15

## தமிழர்கள் வாழும் இடங்களில் ரணில் பிரச்சினைகளை தூண்டி விடுகின்றார் - அநுர

(கொழும்பு)

"ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க, வடக்கிலும், கிழக்கிலும், மலையகத்திலும் எனத் தமிழர்கள் பரந்து வாழும் பிரதேசங்களில் பிரச்சினைகளைத் தூண்டிவிட்டு மக்களைச் சூடாக்கி அதில் குளிர் காய முற்படுகின்றார்."

இவ்வாறு ஜே.வி.பியின் தலைவர் அநுர குமார திஸாநாயக்க குற்றம் 15

## முல்லை நீதிபதியை விமர்சித்த வீரசேகர மீது நடவடிக்கை எடுக்குக

### சபாநாயகரிடம் சுமந்திரன் எம்.பி கோரிக்கை



(கொழும்பு)

பாராளுமன்ற நிலையியற் கட்டளையை மீறும் வகையில் செயற்பட்ட, ஆளும் தரப்பு பாராளுமன்ற உறுப்பினர் சரத் வீரசேகரவுக்கு எதிராக சபாநாயகர் நடவடிக்கை எடுக்க வேண்டும்என்று பாராளு 15

## எதிர்வரும் 30ஆம் திகதி மன்னாரில் உறவுகள் மாபெரும் போராட்டம்

(மன்னார்)

வடக்கு கிழக்கில் உள்ள காணாமல் ஆக்கப்பட்டவர்களின் உறவுகளை ஒன்றிணைத்து எதிர்வரும் 30ஆம் திகதி மன்னாரில் முன்னெடுக்கப்படவுள்ள போராட்டத்திற்கு அனைத்து தரப்பினரும் கலந்து கொண்டுபூரண ஒத்துழைப்பை வழங்க 15

## 9 பிளாஸ்ரிக் பொருட்களுக்கு ஒக்ரோபர் முதல் தடை

(கொழும்பு)

ஒக்ரோபர் முதலாம் திகதி முதல் நாட்டில்ஒருமுறை பயன்படுத்தக்கூடிய 9 பிளாஸ்டிக் பொருட்களின் உற்பத்தி அல்லது விற்பனைக்கு தடை விதிக்கப்படுவதாக மத்திய சுற்றாடல் அதிகாரசபை தெரிவித்துள்ளது.

இது தொடர்பான வர்த்தமானி அறிவித்தல் சுற்றாடல் அமைச்சர் நஸீர் அஹமட்டினால் வெளியிடப்பட்டுள்ளதாக அதிகார 02

## வறட்சியால் நாடு முழுவதும் சுமார் 3 இலட்சம் பேர் பாதிப்பு

(கொழும்பு)

வறட்சியான காலநிலையால் நாடு முழுவதும் சுமார் 3 இலட்சம் பேர் பாதிக்கப்பட்டுள்ளனர்.

நிலவும் வறட்சியினால் இது வரையில் 51 ஆயிரத்து 479 தசம் 89 ஏக்கர் பயிர்ச்செய்கை நிலங்கள் பாதிக்கப்பட்டுள்ளதாக விவசாய அமைச்சு தெரிவித்துள்ளது.

அவற்றில் 51 ஆயிரத்து 55 நெற் செய்கை நிலங்களும் அடங்குவதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

அத்துடன், 46 ஆயிரத்து 72 விவசாயிகளும் பாதிக் கப்பட்டுள்ளதாக அந்த அமைச்சு குறிப்பிட்டுள்ளது. (ம-7)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மரண அறிவித்தல்



## திருமதி கார்த்திகேசு குணபாக்கியவதி

வாகையடி மட்டுவில் தெற்கைப் பிறப்பிடமாகவும் உசனை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி கார்த்திகேசு குணபாக்கியவதி அவர்கள் (23.08.2023) புதன்கிழமை உசனில் காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற கந்தையா - வள்ளிப்பிள்ளை தம்பதியரின் புத்திரியும் காலஞ்சென்ற நாராயணபிள்ளை - நாகமுத்து தம்பதியரின் மூத்த மருமகளும் கார்த்திகேசு(ஓய்வு பெற்ற தபால் ஊழியர்) அவர்களின் அன்பு மனைவியும் முரளிதரன்(லண்டன்), யசிதரன்(லண்டன்), தயாளதரன் (லண்டன்), அகல்யா(ஆசிரியர், யா/உசன் இராமநாதன் மகா வித்தியாலயம்), அனுஷா(ஆசிரியர், யா/சாவகச்சேரி இந்து ஆரம்ப பாடசாலை) ஆகியோரின் அன்புத் தாயாரும் வாசுகி(லண்டன்), கந்தவேள்(இலங்கை, திறந்த பல்கலைக்கழகம் யாழ்ப்பாணம்), ஆகியோரின் அன்பு மாமியாரும் இராசரத்தினம் (நவாலி), அமரர் பத்மநாதன், அமரர் தனபாக்கியவதி(தனம்ரீச்சர் மட்டுவில்), அமரர் பத்மாவதி ஆகியோரின் அன்புச் சகோதரியும் கௌசிகன், அஜந்தன், அபினாஸ், கேசிகா, மிபிசா ஆகியோரின் அன்புப் பேர்த்தியும் ஆவார்.

இத் தகவலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளுமாறு கேட்டுக் கொள்கிறோம்.

இறுதிக் கிரியைகள் பற்றிய விபரம் பின்னர் அறியத்தரப்படும்.

சிற்றம்பலம் வீதி,
உசன், மிருசுவில்.

தகவல் : குடும்பத்தினர்
077 631 4178

(C-7121)

## 9 பிளாஸ்ரிக்...

சபை தெரிவிக்கின்றது.

ஒருமுறை பயன்படுத்தக்கூடிய குடிநீர் குவளைகள், பிளாஸ்ரிக் தட்டுகள், கோப்பைகள், கரண்டிகள், முற்கரண்டி, கத்திகள் உட்பட 9 பிளாஸ்ரிக் பொருட்களுக்கே அக்டோபர் முதலாம் திகதி முதல் தடை விதிக்கப்பட்டுள்ளது.

இதன்படி, அவற்றின் உற்பத்தி, உள்ளூர் பயன்பாட்டுக்காக இறக்குமதி செய்தல், விற்பனை, இலவச சலுகை அல்லது காட்சிப்படுத்தல், ஆகியவை தடை செய்யப்பட்டுள்ளதாக்வும்.

அந்த உத்தரவை மீறுபவர்களுக்கு எதிராக தேசிய சுற்றுச்சூழல் சட்டத்தின் விதிகளின்படி சட்டம் அமுல்படுத்தப்படும் என்றும் மத்திய சுற்றாடல் அதிகார சபை தெரிவித்துள்ளது. (ம-7)

# மணிவிழா வாழ்த்தும் சேவைநலன் பாராட்டும்

## திருமதி மைதிலி சிவநாதன்



**பயிற்றப்பட்ட ஆசிரியர் (ஆரம்பக் கல்வி)**

யா/தந்தை செல்வா தொடக்கநிலைப் பள்ளியின் ஆரம்பக் கல்வி ஆசிரியராகவும் உப அதிபராகவும் பணியாற்றி 23.08.2023 புதன்கிழமை சேவையிலிருந்து ஓய்வுபெறும் ஆசிரியரது சேவையைப் பாராட்டுவதோடு ஓய்வுகாலத்தில் நீண்ட ஆயுள் உடல் உள ஆரோக்கியத்துடன் நீடூழி வாழ எல்லாம் வல்ல இறைவனைப் பிரார்த்தித்து வாழ்த்தி நிற்கின்றோம்.

**சேவை விபரம்**

| | |
|---|---|
| 03.01.2000 - 13.06.2001 வரை | - யா/புன்னலைக்கட்டுவன் சித்திவிநாயகர் வித்தியாலயம், (யா/புன்னலைக்கட்டுவன் அ.த.க பாடசாலை) |
| 14.06.2001 - 30.06.2003 வரை | - கோப்பாய் ஆசிரியர் பயிற்சிக் கலாசாலை |
| 01.07.2003 - 07.01.2007 வரை | - யா/புன்னாலைக்கட்டுவன் சித்திவிநாயகர் வித்தியாலயம் (யா/புன்னாலைக்கட்டுவன் அ.த.க.பாடசாலை) |
| 08.01.2007 - 03.01.2016 வரை | - யா/விசாலாட்சி வித்தியாசாலை, மல்லாகம் |
| 04.01.2016 - 23.08.2023 வரை | - யா/தந்தை செல்வா தொடக்கநிலைப் பள்ளி, தெல்லிப்பழை. |

"உயர்சேவை நிறை வாழ்த்து"

பாடசாலைச் சமூகம்
யா/தந்தை செல்வா தொடக்கநிலைப் பள்ளி, தெல்லிப்பழை.

(16783)

# 2ஆம் ஆண்டு நினைவஞ்சலி

## அமரர் இலங்கைநாயகி தனபாலசிங்கம்



| தோற்றம் | மறைவு |
|---|---|
| 1955.07.07 | 2021.09.14 |

திதி : பூர்வபக்ஷ அட்டமி

ஆண்டுகள் இரண்டு ஓடிப்
பறந்துமே போனதம்மா
நீண்டுமே போகும் உந்தன்
நினைவுகள் வந்து வந்து
தூண்டியே எம்மையெல்லாம்
துயருறச் செய்யுதம்மா
ஆண்டிடும் அன்பினாலே
எங்களைக் கட்டி வைத்தாய்
மீண்டுமே வாராதானாய்
மிக விரைவாகப் போனாய்
பூண்ட நல் மகிழ்ச்சி தன்னை
மக்களுக் கீந்தாய் நின்னை
மாண்டிடச் செய்த அந்தக்
கொடிய நோய் தன்னை வைவோம்
வேண்டுவோம் இறைவன் தன்னை
உந்தனின் ஆன்மா ஆற

இல.352, கஸ்தூரியார் வீதி,
யாழ்ப்பாணம்.

(16812)

என்றும் பிரிவுத் துயரில் ஆழ்ந்திருக்கும்
குடும்பத்தினர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சிறுவயதில் மாரடைப்பு ஏற்படும் அபாயம்

## வைத்திய நிபுணர்கள் எச்சரிக்கை


(கொழும்பு)

**பாடசாலைக்கு செல்லும் சிறுவர்களுக்கு சிறு வயதிலேயே மாரடைப்பு ஏற்படும் அபாயம் உள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.**

மனஅழுத்தம், உணவுக் கட்டுப்பாடு, உடற்பயிற்சியின்மை போன்ற காரணங்களால் இந்நோய்கள் வரும் அபாயம் உள்ளதாகக் குறிப்பிடப்படுகிறது.

உடல் ஆரோக்கியம் மற்றும் மன ஆரோக்கியம் ஆகியவற்றில் அதிக கவனம் செலுத்துவதன் மூலம், சிறு வயதிலேயே மாரடைப்பு அபாயத்தை தவிர்க்க முடியும் என வைத்திய நிபுணர்கள் சுட்டிக்காட்டுகின்றனர். (நி)

## 275,000 இன்சுலின் மருந்துகள் இறக்குமதி



(கொழும்பு)

நாட்டில் தட்டுப்பாடு நிலவிய 275,000 இன்சுலின் மருந்து பொதிகள் இறக்குமதி செய்யப்பட்டுள்ளதாக சுகாதார அமைச்சு தெரிவித்துள்ளது.

இறக்குமதி செய்யப்பட்ட இன்சுலின் மருந்துப் பொதிகளை வைத்தியசாலைகளுக்கு விநியோகிக்கும் நடவடிக்கைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளதாக அமைச்சின் மேலதிக செயலாளர், வைத்தியர் சமன் ரத்நாயக்க குறிப்பிட்டுள்ளார். (நி)

## நாடு திரும்பினார் ஜனாதிபதி ரணில்



(கொழும்பு)

இரண்டு நாள் உத்தியோக பூர்வ விஜயத்தை மேற்கொண்டு சிங்கப்பூர் சென்ற ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க நேற்று அதிகாலை நாடு திரும்பியுள்ளார்.

சிங்கப்பூர் பிரதமருடன் புரிந்துணர்வு ஒப்பந்தத்தில் கைச்சாத்திட்ட ஜனாதிபதி, இலங்கையின் பொருளாதாரம் மற்றும் பாதுகாப்பு தொடர்பான வெற்றிகரமான கலந்துரையாடல் தொடரில் பங்கேற்றமை குறிப்பிடத்தக்கது. (நி)

### ஐ.நா மனித உரிமைகள் பேரவையின்

# 54 ஆவது கூட்டத்தொடர் அடுத்த மாதம் ஆரம்பம்



(கொழும்பு)

ஜெனிவாவில் எதிர்வரும் செப்டெம்பர் மாதம் ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் பேரவையின் 54 ஆவது கூட்டத்தொடர் ஆரம்பமாகவுள்ளது.

இதன்போது இலங்கை தொடர்பாக ஐக்கிய நாடுகள் பேரவையின் உயர்ஸ்தானிகரின் எழுத்துமூல அறிக்கை சமர்ப்பிக்கப்படவுள்ளது.

ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் பேரவையின் 54 ஆவது கூட்டத்தொடர் ஜெனிவாவில் எதிர்வரும் செப்டெம்பர் மாதம் 11 ஆம் திகதி ஆரம்பமாகி, ஒக்டோபர் மாதம் 13 ஆம் திகதி வரை நடைபெறவுள்ளது.

இக்கூட்டத்தொடர் குறித்த ஒழுங்கமைப்புக்கூட்டம் எதிர்வரும் 28 ஆம் திகதி ஜெனிவாவில் நடைபெற இருப்பதாக ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் பேரவை தெரிவித்துள்ளது.

அதன்படி எதிர்வரும் கூட்டத்தொடரின்போது ஏற்கனவே இலங்கை தொடர்பில் பேரவையில் நிறைவேற்றப்பட்ட 51 கீழ் 1 தீர்மானத்தின் உள்ளடக்கங்களின் அமுலாக்கத்தில் அடையப்பட்டுள்ள முன்னேற்றம் குறித்து எழுத்துமூல அறிக்கை சமர்ப்பிக்கப்படவுள்ளது. (நி)




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மரண அறிவித்தல்



## திருமதி மாணிக்கம் தெய்வேந்திர ஐயர்

செல்வச்சந்நிதி தொண்டைமானாற்றை பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி மாணிக்கம் தெய்வேந்திர ஐயர் அவர்கள் 23.03.2023 புதன்கிழமை முருகனடி சேர்ந்தார்.

அன்னார் திரு.விசாகரத்தின ஐயர் தெய்வேந்திர ஐயரின்(பிரதம குரு செல்வச் சந்நிதி ஆலயம்) அன்பு மனைவியும் காலஞ்சென்ற ஆறுமுகசாமி ஐயர் - வேதநாயகி தம்பதியரின் அன்பு மகளும் விசாகரத்தின ஐயர் - நேசம்மா தம்பதியரின் அன்பு மருமகளும் மகேந்திரராணி, ஜெயந்திரன், சசீந்திரன், ரவிந்திரன், அமரர் துஷியேந்திரன் ஆகியோரின் அன்பு தாயாரும் சிறீரஞ்சன், சசிகலா, ஜெயந்தாதேவி, சுகிதா ஆகியோரின் அன்பு மாமியாரும் ஆ.சிவசண்முக ஐயரின் (பிரதம குரு செல்வச் சந்நிதி ஆலயம்) அன்புச் சகோதரியும் அமரர் வி.நாகேந்திரன், அமரர் கு.தேவாம்பிகை, வி.இராசேந்திரன், பா.விமலாம்பிகை, வி.விஜேந்திரன், வி.யோகேந்திரன், அமரர் வி.லோகேந்திரன் ஆகியோரின் அன்பு மைத்துனியும் கபிலன், லோகஜன், ஹரீந்திரன், நரேந்திரன், யுகேந்திரன், வைஸ்ணவி, மயூரதி, தீபிகா, சுதர்சினி, கிருஷ்ணேந்திரன், சிவநேந்திரன் ஆகியோரின் அருமைப் பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று வியாழக்கிழமை காலை 10.00 மணிக்கு ஆரம்பமாகி 12.00 மணியளவில் காட்டுப்புலம் இந்து மயானத்தில் தகனம் செய்யப்படும்.

இத் தகவலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளுமாறு கேட்டுக் கொள்கிறோம்.

தெய்வேந்திர ஐயர் - 021 226 5728
சசீந்திர ஐயர் - 077 244 0642

(16826)

தகவல் :
குடும்பத்தினர்








சாவகச்சேரிப் பிரதேசசபையின் கைதடிப் பொது நூலகத்திற்கு யாழ்ப்பாணம் லயன்ஸ் கழகத்தினரால் நேற்று முன்தினம் செவ்வாய்க்கிழமை ஒரு தொகுதி உள்ளக விளையாட்டுப் பொருட்கள் வழங்கி வைக்கப்பட்டுள்ளன. (படம்:-சுபேசன்)

### யா/மகாஜனக் கல்லூரி தெல்லிப்பழை

## தரம் 9 மாணவர்களுக்கான மகாஜனன் கணித விஞ்ஞான திறன்காண் போட்டிப் பரீட்சை - 2023

யா/ மகாஜனக் கல்லூரியின் முன்னாள் ஆசிரியை அமரர் சௌபாக்கியவதி இராஜரட்ணம் அவர்களின் ஞாபகார்த்தமாக, சட்டத்தரணி இ.செல்வஸ்கந்தன்(மகாஜனன்) அவர்களால் தரம் 9 மாணவர்களுக்காக நடாத்தப்படும் மேற்படி பரீட்சை எதிர்வரும் ஒக்டோபர் மாதம் 7 ஆம் திகதி நடாத்தப்பட இருக்கின்றது என்பதை மகிழ்ச்சியுடன் அறியத்தருகின்றோம். இதற்கான விண்ணப்பங்கள் யாவும் மாணவர் முழுப்பெயர், பிறந்த திகதி, தொலைபேசி இலக்கம் உள்ளடங்கலாக பாடசாலை அதிபரின் உறுதிப்படுத்தலுடன் 15.09.2023 இற்கு முன்னதாக அதிபர், யா/மகாஜனக் கல்லூரி, தெல்லிப்பழை எனும் முகவரிக்கு அல்லது jayamahajana2010@gmail.com எனும் மின்னஞ்சல் முகவரிக்கு அனுப்பி வைக்குமாறு கேட்டுக் கொள்கின்றோம்.

**பரீட்சை நிலையங்கள்**

8. வவுனியா - வவு/தமிழ் மத்திய மகா வித்தியாலயம்
9. மன்னார் - மன்/சித்திவிநாயகர் இந்துக் கல்லூரி
10. கிளிநொச்சி/ முல்லைத்தீவு - கிளி/ மத்திய மகா வித்தியாலயம்
11. யாழ்ப்பாணம் - யா/இந்துக் கல்லூரி
12. தென்மராட்சி - யா/ சாவகச்சேரி இந்துக் கல்லூரி
13. வடமராட்சி - யா/ஹாட்லிக் கல்லூரி
14. வலிகாமம். - யா/ மகாஜனக் கல்லூரி

**பரிசில் விபரம்**

1 ஆம் இடம் - 40,000/=
2 ஆம் இடம் - 30,000/=
3 ஆம் இடம் - 20,000/=
4,5,6 இடம் - 15,000/=
7,8,9,10 ஆம் இடங்கள் - 10,000/=
ஆறுதல் பரிசில்கள் - 5,000/=

(C-7122) - அதிபர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# துயர் பகிர்கிறோம்



தோற்றம்
18 . 12 . 1944

மறைவு
21 . 08 . 2023

எமது பாடசாலை ஆசிரியர்
திருமதி.ஜெயந்தினி வரதராஜன்
அவர்களின் தாயார்
திருமதி.

## சிவபாக்கியம் பத்திநாதன்

இறைபதம்
அடைந்து விட்டார். அவருடைய
குடும்பத்தினருக்கு ஆழ்ந்த அனுதாபங்களை
தெரிவிப்பதோடு அன்னாரின்
ஆத்மா சாந்தியடைய பிரார்த்திக்கின்றோம்.

**பாடசாலைச் சமூகம்,**
**யா/சிறுப்பிட்டி அ.த.க பாடசாலை.**

(16816)

### நரிகளின் எண்ணிக்கை நாட்டில் வீழ்ச்சி

(கொழும்பு)

இலங்கையில் கடந்த பத்து வருடங்களில் நரிகளின் எண்ணிக்கை கணிசமாகக் குறைந்துள்ளதாக கொழும்பு பல்கலைக்கழகத்தின் விலங்கியல் துறையின் ஆய்வுக் குழு உறுதிப்படுத்தியுள்ளது.

வசிப்பிட இழப்பு. உணவு கிடைக்காதது. நாட்டின் வீதி வலையமைப்பு விரிவாக்கம்ஆகியனவே நாட்டில் நரிகளின் எண்ணிக்கை குறைவதற்கு முக்கிய காரணம் என இந்த ஆய்வு உறுதி செய்துள்ளது. (நி)

# முதலாம் ஆண்டு நினைவஞ்சலி



## அமரர். கந்தையா அருமைத்துரை

நெஞ்சம் நிறைந்த அன்போடு
நெகிழ்ந்த உளப் பாங்கோடு
தஞ்சம் என வந்தோரை
தாங்கி நின்ற பரிவோடு
நெஞ்சறிந்த நேர்மை கொண்டு
நேசித்த தொழில் முகாமைப் பண்போடு
மெச்ச வாழ்ந்து மறைந்து விட்டீர்
மேலான வணக்கத்தைத்
தெரிவிக்கின்றோம்.

(16762)

வேப்பங்குளம்,
வவுனியா.

குடும்பத்தினர்.




## கந்தன் கருணை

நல்லூர் பதியினிலே வாழும்
கந்தனே
எம்மைக் காத்தருள வேண்டுமையா
கந்தனே
கருணைக் கடலில் மக்களை ஆளும்
கந்தனே
உலக மக்களின் மனங்களில் குடி
புகுவாய் கந்தனே

சுபானுஜன்,
கொக்குவில்.

## நல்லூர்க் கந்தனே!

நம்மவரைக் காக்கும்
நல்லூர்க் கந்தனே!
நடைபவனியில் வருகிறார்கள்
உனைத் தேடி!

உன் அளவற்ற அருளை
எடுத்துரைக்க வார்த்தைகளில்லை...
இருந்தும் வார்த்தைகளாகின்றன
அடியவர்களின் கண்ணீர்...

நவை தவிர் உணர்வானாய் நீயே!!
இருபத்தைந்து நாட்கள் தானா எமைக்
காண வருவாய் நல்லூர்க் கந்தா!!

சுமிதா,
அராலியூர்.

# இராசிபலன்

24.08.2023
ஆவணி 07, வியாழக்கிழமை
அட்டமி முன்னிரவு 10.19 மணிவரை

அனுசம் பின்னிரவு 5.29 மணிவரை
சுபநேரம் -7.35-9.05 மணிவரை
இராகுகாலம்-1.35-3.05 மணிவரை

சந்திராஷ்டமம்-
பரணி.

**வளவன்**

**மேஷம்** ஆரோக்கியத்தில் அக்கறை காட்டும் சூழ்நிலை ஏற்படலாம், வழிபாட்டால் மகத்துவம் காண வேண்டிய நாள், மனதில் இனம்புரியாத குழப்பங்கள் தோன்றி மறையும்.

**கடகம்** தொழிலில் புதிய பொறுப்புக்கள் வந்து சேரலாம், சுப நிகழ்வுகளில் கலந்து கொள்ளும் வாய்ப்புண்டு, பெற்றோர் மீதான பாசம் கூடும், தாழ்ந்த சுபாவமுண்டு.

**துலாம்** வருமானம் பெருக வழியமைத்துக் கொள்வீர்கள், பெரிய மனிதர்களின் ஒத்துழைப்புக்கள் கிடைக்கும், புதிய பொறுப்புக்களும் பதவிகளும் வந்து சேரலாம்.

**மகரம்** பணத் தேவைகள் எளிதில் பூர்த்தியாகும், இறைவழிபாட்டுச் சிந்தனை மேலோங்கும் நாள், மனதிற்கினிய சம்பவங்கள் நடைபெறும் நாள்.

**ரிஷபம்** ஆடம்பரப் பொருட்களை வாங்குவதில் ஆர்வம் காட்டுவீர்கள், செய்தொழில் மேன்மையுண்டு, எடுத்த காரியங்கள் எளிதில் கைகூடும், காரிய அனுகூலமுண்டு.

**சிம்மம்** தாயின் உடல் நலம் சீராகும், சிந்தித்து செயற்பட்டு சிறப்புக்களை காணும் நாள், மகிழ்ச்சி தரும் பயணங்கள் ஏற்படலாம், நண்பர்களின் சந்திப்புகள் இடம்பெறலாம்.

**விருச்சிகம்** குடும்பத்தினர் உங்கள் குணமறிந்து நடந்து கொள்வர், வழிபாடு குதூகலம் தரும், விரும்பிய காரியம் விரும்பிய படியே கைகூடும்.

**கும்பம்** பொழுதுபோக்கு விடயங்களில் ஆர்வம் கூடும், இயல்பான வாழ்க்கையில் இன்பங்கள் கூடும், நல்வர்களின் அறிவுரையும் ஆதரவும் கிடைக்கும்

**மிதுனம்** தன்னம்பிக்கையும் தைரியமும் அதிகரிக்கும், வீட்டை பராமரிப்பதில் ஆர்வம் காட்டுவீர்கள், கூட்டுத்தொழிலில் எதிர்பார்த்த ஆதாயம் கிடைக்கலாம்.

**கன்னி** நீண்ட நாளைய பிணக்குகளில் திசை திருப்பங்கள் ஏற்படலாம், வெளியூர்த் தொடர்புகள் அனுகூலம் தரும், சுய முயற்சியின் மூலம் சுகம் காணும் நாள்.

**தனுசு** திட்டமிட்ட காரியமொன்றில் திசை திருப்பங்கள் ஏற்படலாம், சுபவிரயங்கள் அதிகரிக்கும் நாள், காரிய அலைச்சல்கள் சற்று அதிகரிக்கும்.

**மீனம்** சுணங்கிய காரியங்கள் சுறுசுறுப்பாக நடைபெறலாம், அன்பால் சாதித்துக் காட்டும் நாள், விலகிச் சென்றவர்கள் விரும்பி வந்து இணைவர், பயணங்கள் கைகூடும்.

**விட்டுக்கொடுக்கா[illegible] இழந்து விடுவார்கள்.**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நல்லூர் உற்சவகால தெய்வீக இசை அரங்கு

(யாழ்ப்பாணம்)

யாழ்.இளங்கலைஞர் மன்றத்தின் நல்லூர் முருகன் உற்சவ கால தெய்வீக இசை அரங்கில் நாளை 25 ஆம் திகதி மாலை 6.45 மணிக்கு நல்லூர் துர்க்கா தேவி மணிமண்டபத்தில் இசை அரங்கு இடம்பெறவுள்ளது.

இதன்போது புஸ்பநாதன் லதுர்ஷன் பாட்டு பாடவுள்ளதுடன் இ.நிரோஜன் வயலினும் ப.விக்னேஸ்வரன் மிருதங்கம் மற்றும் ப.சாரங்கன் கஞ்சிரா இசைக்கவுள்ளனர்.

அதனைத் தொடர்ந்து இரவு 7.15 மணிக்கு இடம்பெறவுள்ள இசை அரங்கில் சஷ்யந்தி சங்கர் பாட்டுபாடவுள்ளதுடன் சியாம கிஷ்ணா வயலினும் ம.லோகேந்திரன் மிருதங்கமும் மற்றும் சி.மாதுளன் கஞ்சிரா இசைக்கவுள்ளனர். (4-6)

# தெய்வீக திருக்கூட்டம்

(யாழ்ப்பாணம்)

இந்து சமய, கலாசார அலுவல்கள் திணைக்களம், நல்லூர் உற்சவ காலத்தை முன்னிட்டு நடத்தும் தெய்வீகத் திருக்கூட்டம் - தொடரின் 4 ஆம் நாள் நிகழ்வுகள் இன்று மாலை 4.15 மணிக்கு நல்லை திருஞான சம்பந்தர் ஆதீனக் கலா மண்டபத்திலே இந்து சமய, கலாசார அலுவல்கள் திணைக்களப் பணிப்பாளர், ய.அநிருத்தனன் தலைமையில் இடம்பெறவுள்ளது.

நல்லை திருஞானசம்பந்தர் ஆதீன முதல்வர், ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர தேசிக ஞானசம்பந்தபரமாசார்ய சுவாமிகள் திருமுன்னிலை வகிக்க ஆன்மீகச் சுடர் ரிஷி தொண்டு நாதன் சுவாமிகள் அருளுரையினை வழங்கவுள்ளனர்.

உடுவில் பிரதேச செயலாளர் திரு.த.முகுந்தன் பிரதம அதிதியாகவும் சிறப்பு அதிதியாக ஊர்காவற்றுறை பிரதேச செயலக உதவித் திட்டமிடல் பணிப்பாளர் திருமதி இலக்கியா ஜெயகரன் கலந்து சிறப்பிக்கவுள்ளனர். (4-6)



தெல்லிப்பழை துர்க்காதேவி தேவஸ்தான வருடாந்த மஹோற்சவத்தில் தங்கரத உற்சவம் நேற்று முன்தினம் இடம்பெற்றது. (படம்:-கஜிந்தன்)

# புகையிரத கடவை சமிக்ஞையை மீறியவர் பொலிஸாரால் கைது

## நபருக்கு தண்டம்

(கண்டாவளை)

புகையிரத கடவை சமிக்ஞையை மீறி மோட்டார் சைக்கிள் செலுத்தி சென்றவருக்கு 25000 ரூபாய் தண்டப்பணம் விதிக்கப்பட்டுள்ளது.

கிளிநொச்சி பகுதியில் புகையிரதக் கடவையில் அபாய சமிக்ஞை போடப்பட்டிருந்த சமயம் அதனை மீறி மோட்டார் சைக்கிளை செலுத்திச் சென்ற ஒருவரை பொலிஸார் கைது செய்து அவருக்கு எதிராக கிளிநொச்சி நீதிமன்றில் வழக்கு பதிவு செய்தனர்.

வழக்கு நேற்று முன்தினம் கிளிநொச்சி மாவட்ட நீதிவான் நீதிமன்றில் நீதிமன்ற நீதிவான் எஸ்.சுபராஜினி முன்னிலையில் எடுக்கப்பட்ட போது அவருக்கு 25,000 ரூபா தண்டப்பணம் விதிக்கப்பட்டது. (4-6-315)

# யாழ்.பல்கலைக்கழக கலைப்பீட மாணவர் ஒன்றியத்தின் புதிய தலைவராக நெவில்குமார் தெரிவு

(அராலி)

யாழ்ப்பாண பல்கலைக் கழகத்தின் கலைப்பீட மாணவர் ஒன்றியத்தின் புதிய தலைவராக யோ.நெவில் குமார் தெரிவு செய்யப்பட்டுள்ளார்.

யாழ்ப்பாண பல்கலைக் கழகத்தின் கலைப்பீட மாணவர் ஒன்றியத்திற்கு புதிய தலைவர் மற்றும் நிர்வாக உறுப்பினர்களை தெரிவு செய்யும் தேர்தல் கலைப்பீட மாணவர் ஒன்றியத்தின் ஏற்பாட்டில் நேற்று முன்தினம் நடைபெற்றது.

அதில் வேட்பாளர்களாக த.டிசான், ஜெ.ஜெயகரன், யோ.நெவில்குமார் ஆகிய மூன்று பேர் போட்டியிட்டனர்.

இந் நிலையில் யோ.நெவில் குமார் 206 வாக்குகளையும் ஜெ.ஜெயகரன் 151 வாக்குகளையும் த.டிசான் 96 வாக்குகளையும் பெற்றனர்.

206 வாக்குகளை பெற்ற யோ.நெவில்குமார் கலைப் பீட மாணவர் ஒன்றியத் தலைவராக தெரிவு செய்யப்பட்டார். (நி-104)

# அனுமதிப் பத்திரங்கள் இன்றி வாகனம் செலுத்தியவர் கைது

## ரூ.45,500 அபராதம்

(கண்டாவளை)

கிளிநொச்சி பகுதியில் வரி பத்திரம், காப்புறுதிப்பத்திரம், சாரதி அனுமதிப்பத்திரமின்றி பொலிஸாரின் சைகையை மீறி வாகனத்தை செலுத்திய ஒருவருக்கு 45,500 ரூபாய் தண்டப் பணம் விதிக்கப்பட்டுள்ளது.

கிளிநொச்சி நகரை அண்மித்த பகுதியில் வரிப்பத்திரம், காப்புறுதிப்பத்திரம், சாரதி அனுமதிப்பத்திரமின்றி, பொலிஸாரின் சைகையை மீறி வாகனத்தை செலுத்திய ஒருவரை கைது செய்து அவருக்கு எதிராக வழக்கு பதிவு செய்த கிளிநொச்சி பொலிஸார் குறித்த நபரை நேற்று முன்தினம் கிளிநொச்சி மாவட்ட நீதிவான் நீதிமன்றில் நீதிவான் எஸ்.சுபராஜினி முன்னிலையில் ஆஜர்படுத்தினார்.

அதனையடுத்து மேற்குறித்த குற்றத்துக்காக 45,500 ரூபாய் தண்டப்பணம் அவருக்கு விதிக்கப்பட்டுள்ளது. (4-6-315)

# 'சிறுபொறி' இதழ் வெளியீடு

(யாழ்ப்பாணம்)

மாணவர் இதழான 'சிறுபொறி' இதழ் வெளியீட்டு விழா நாளை வெள்ளிக்கிழமை காலை 9 மணிக்கு கே.ஏ.எஸ் சத்திமனை நூலக அரங்கில் பதில் நீதிவான் சிரேஷ்ட சட்டத்தரணி சோ.தேவராஜா தலைமையில் இடம்பெறவுள்ளது.

இந் நிகழ்வில் சிறப்பு விருந்தினராக வலி.மேற்கு பிரதேச செயலகர் பிரேமினி பொன்னம்பலம் கலந்து கொள்ளவுள்ளார்.

மேலும் செம்முகம் அரங்காற்றுகைக் குழுவினரின் அரங்கேற்றமும் இடம்பெறும். (4-6)

# சந்தைகளில் நேற்றைய விலை

| மரக்கறி வகைகள் | திருநெல்வேலி | மருதனார்மடம் | சாவகச்சேரி | கிளிநொச்சி |
|---|---|---|---|---|
| | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| கத்தரிக்காய் | 180 | 200 | 150 | 200 |
| உருளைக்கிழங்கு | 200 | 200 | 200 | 220 |
| பச்சைமிளகாய் | 350 | 300 | 400 | 500 |
| தக்காளி | 180 | 150 | 150 | 160 |
| மரவள்ளிக்கிழங்கு | 220 | 200 | 200 | 200 |
| கோவா | 250 | 250 | 250 | 250 |
| கரட் | 350 | 400 | 450 | 500 |
| பூசணி | 80 | 120 | 100 | 100 |
| புடோல் | 80 | 80 | 100 | 120 |
| வாழைக்காய் | 150 | 200 | 150 | 150 |
| சின்ன வெங்காயம் | 250 | 200 | 300 | 300 |
| பெரிய வெங்காயம் | 200 | 180 . | 200 | 200 |
| பாகற்காய் | 300 | 400 | 400 | 300 |
| வெண்டக்காய் | 80 | 100 | 80 | 250 |
| கருணைக் கிழங்கு | 160 | 180 | 150 | 200 |
| பயற்றங்காய் | 250 | 250 | 150 | 150 |
| லீக்ஸ் | 200 | 180 | 200 | 200 |
| பீற்றூட் | 140 | 80 | 150 | 140 |
| கறிமிளகாய் | 300 | 300 | 250 | 250 |
| முருங்கைக்காய் | 300 | 350 | 350 | 300 |
| போஞ்சி | 450 | 400 | 550 | 550 |
| கத்தரிதம்புள்ள | 150 | 100 | 100 | 150 |
| கீரை - 1 பிடி | 80 | 80 | 60 | 100 |
| தேசிக்காய் | 450 | 450 | 450 | 80 |
| தேங்காய் (ஒன்று) | 80 | 70 | 80 | 60-80 |
| இராசவள்ளி | 300 | 400 | 400 | 300 |
| வெங்காயப்பூ | 200 | 250 | 250 | 400 |
| முள்ளங்கி | 80 | 80 | 100 | 150 |
| பொன்னாங்காணி | 80 | 70 | 80 | 50 |
| வல்லாரை | 40 | 30 | 30 | 60 |
| ஈரப்பலா | 80 | 80 | 80 | 100 |

# வடமராட்சியில் விபத்து மு.வண்டி சாரதி படுகாயம்

(கரணவாய்)



வடமராட்சியில் இடம்பெற்ற விபத்தொன்றில் ஒருவர் படுகாயமடைந்து வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

சம்பவம் தொடர்பில் மேலும் தெரிய வருகையில்,

வடமராட்சி மத்திய மகளிர் கல்லூரி வீதியூடாக வதிரி நோக்கி வந்த முச்சக்கர வண்டிக்கு முன்பாக சென்ற மோட்டார் சைக்கிள் திடீரென வீதியின் குறுக்காக திரும்ப முற்பட்ட போது வேகக் கட்டுப்பாட்டை இழந்த முச்சக்கர வண்டி மதிலுடன் மோதியதில் முச்சக்கர வண்டி சாரதி காயமடைந்தார்.

காயமடைந்த சாரதி பருத்தித்துறை ஆதார வைத்தியசாலையில் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டுள்ளார்.

இச்சம்பவம் நேற்று புதன்கிழமை காலை இடம்பெற்றது. சம்பவம் தொடர்பாக நெல்லியடி பொலிஸார் விசாரணை மேற்கொண்டு வருகின்றனர்.

# பகிரங்க ஏலவிற்பனை

(யாழ்ப்பாணம்)

யாழ்.நீதிவான் நீதிமன்ற வழக்குகளில் பறிமுதல் செய்யப்பட்ட மோட்டார் சைக்கிள்கள், துவிச்சக்கர வண்டிகள், உழவியந்திரப் பெட்டி, முச்சக்கர வண்டி மற்றும் இதரபொருட்கள் என்பன நீதிமன்ற வளாகத்தில் வைத்து நாளையதினம் காலை 9 மணிக்கு பகிரங்க ஏலத்தில் விற்பனை செய்யப்படவுள்ளன.

குறித்த ஏலத்தில் கொடுப்பனவுகளை பணமாகவே செலுத்த வேண்டும். காசோலை ஏற்றுக்கொள்ளப்படமாட்டது. தமது தேசிய அடையாள அட்டையுடன் சமுகமளிக்க வேண்டும்.

அத்துடன் ஏலவிற்பனையில் பெற்றுக்கொள்ளும் பொருட்களை அன்றையதினமே உடனடியாக வளாகத்திலிருந்து அகற்ற வேண்டும் என நீதிமன்ற பதிவாளர் அறிவித்துள்ளார். (4-6)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தேசத்தின்
மாபெரும் செல்வ புதையல்



தன நிதானய
பரிசு இரட்டிப்பாகியது
சுப்பர் பரிசு
10 கோடி
Double Chance
மேலதிக சீட்டிழுப்பில்
நாடு முழுவதும் இலட்சாதிபதிகளை - நாளாந்தம் உருவாக்கும்
அதிர்ஷ்டசாலி நீங்கள் தன நிதானய
NLB | தேசிய லொத்தர் (சி-2100)
வாழ்வின் கனவுக்கு - அதிர்ஷ்டத்தின் ஆசிர்வாதம்

# பிரதி சபாநாயகருக்கு அச்சுறுத்தல்; எம்.பி இருவர் வெளியேற்றம்!

## பாராளுமன்றில் நேற்று பதற்றம்

(கொழும்பு)

பாராளுமன்ற தலைமை பீடத்திற்குச் சென்று பிரதி சபாநாயகருக்கு அச்சுறுத்தல் விடுத்தமை காரணமாக பாராளுமன்ற உறுப்பினர்கள் நளின் பண்டார மற்றும் வசந்த யாப்பா பண்டார ஆகியோர் பாராளுமன்ற அமர்விலிருந்து வெளியேற்றப்பட்டனர்.

பாராளுமன்ற அமர்வு நேற்று மு.ப 9.30 மணிக்கு ஆரம்பமாகி மு.ப. 9.30 மணி முதல் 10.30 மணி வரை வாய்மூல விடைக்கான வினாக்களுக்காக நேரம் ஒதுக்கப்பட்டன.

அதனையடுத்து, மு.ப 10.30 மணி முதல் பி.ப 5. மணி வரை இறக்குமதி மற்றும் ஏற்றுமதி (கட்டுப்பாட்டு) சட்டத்தின் கீழ் ஒழுங்குவிதிகள், ஏற்றுமதி அபிவிருத்திச் சட்டத்தின் கீழ் கட்டளை, கொழும்பு துறைமுக நகர பொருளாதார ஆணைக்குழு சட்டத்தின் கீழ் ஒழுங்குவிதிகள் மற்றும் செயல்நுணுக்க அபிவிருத்திக் கருத்திட்டங்கள், சட்டத்தின் கீழ் கட்டளை என்பன விவாதத்துக்கு எடுத்துக் கொள்ளப்பட்டன.

அமர்வு, சபாநாயகர் மஹிந்த யாப்பா அபேவர்தன தலைமையில் கூடிய வேளை பிரதி சபாநாயகரை அச்சுறுத்தும் வகையில் செயற்பட்டதால் பாராளுமன்ற உறுப்பினர்கள் நளின் பண்டார மற்றும் வசந்த யாப்பா பண்டார ஆகியோரை சபையிலிருந்து வெளியேறுமாறு சபாநாயகர் அறிவித்தார்.

இதனால் ஏற்பட்ட அமைதியின்மையின் காரணமாக, சபை அமர்வு 10 நிமிடங்களுக்கு ஒத்திவைக்கப்பட்டதுடன் மீண்டும் அமர்வு ஆரம்பிக்கப்பட்டது. (நி)


# 13 ஆவது திருத்தம் தொடர்பில்

# நெகிழ்ச்சித் தன்மையுடன் தமிழ்க் கட்சிகள் செயற்பட வேண்டும்

## மிலிந்த மொரகொட கோரிக்கை

(டில்லி)

13 ஆவது திருத்தம் தொடர்பில் தமிழ் அரசியல் தலைவர்கள் நெகிழ்ச்சி தன்மையை வெளிப்படுத்த வேண்டும் என இந்தியாவிற்கான இலங்கை தூதுவர் மிலிந்த மொரகொட வேண்டுகோள் விடுத்துள்ளார்.



இந்திய ஊடகமொன்றிற்கான பேட்டியில் அவர் இதனை தெரிவித்துள்ளார்.

இலங்கையில் தமிழ் சிறுபான்மையினத்தவர்களுக்கு சம உரிமையை வழங்க முயலும் 13 ஆவது திருத்தத்தை நடைமுறைப்படுத்துவது குறித்த சர்ச்சைக்குரிய விடயம் குறித்து கருத்து தெரிவித்துள்ள மிலிந்த மொரகொட, ரணில் விக்கிரமசிங்க அரசாங்கம் தற்போது இது தொடர்பில் நடவடிக்கைகளில் ஈடுபட்டுள்ளதால் தமிழ் தலைவர்கள் நெகிழ்ச்சி தன்மையை வெளிப்படுத்த வேண்டும் எனத் தெரிவித் தார்.

தீர்வொன்றை காண்பதற்கு ரணில் விக்கிரமசிங்க தனது நாட்டின் தலைவர்களை கடந்த சில மாதங்களாக சந் தித்து வருகின்றார். இந்த விவகாரத்தில் பாராளுமன்றத்தின் கருத்தொருமைப்பாட்டினை பெற முயலகின்றார்.

ஜனநாயகத்தில் இது சவாலான விடயம் என தெரிவித்துள்ள மிலிந்த மொரகொட வெவ்வேறு குழுக்கள் வெவ்வேறு கருத்தினை கொண்டிருப்பது வழமை.

இலங்கைஜனாதிபதி கிழக்கு மற்றும் வடக்கு கிழக்கின் அபிவிருத்தி குறித்தும் பேசுகின்றார் என தெரிவித்துள்ள மிலிந்த மொரகொட திருகோணமலையை பார்த்தீர்கள் என்றால் அது கிழக்கிற்கு முக்கிய அபிவிருத்தியாக அமையப் போகின்றது எண்ணெய்க் குழாய்கள் அவர்களுக்கு உதவும் எனவும் தெரிவித்துள்ளார். (நி)

கொழும்புத்துறை மேற்கு வதர்பீட ஸ்ரீவிநாயகப் பெருமான் ஆலயம்

**பொதுக் கூட்டமும் நிர்வாகசபைத் தெரிவும் 2023**

மேற்படி ஆலயத்தின் பொதுக் கூட்டமும் நிர்வாக சபைத் தெரிவும் எதிர்வரும் 17.09. 2023 ஞாயிற்றுக்கிழமை மாலை 3.30 மணிக்கு ஆலய மண்டபத்தில் நடைபெற இருப்பதால் சகல மகா சபை உறுப்பினர்களையும் தவறாது சமுகமளிக்குமாறு கேட்டுக் கொள்கிறோம்.

**கௌரவ செயலாளர்,**
**ஆலய நிர்வாக சபை.**

(16817)



யாழ்.ஒஸ்மானியா கல்லூரி மாணவர்களின் எதிர்காலம் பற்றி புதிய அதிபர் N.M.SHAFIE SLPS-1 அவர்களுடன் கலாபூஷணம் யாழ்.பரீட் இக்பால், சமூக ஆர்வலர்கள் சனூன் மொஹமட் நாஸர், ஹாமீம் சுவைஸ் ஆகியோர் கலந்துரையாடிய போது எடுத்த படம்.

[illegible]

**வட இலங்கை சங்கீத சபை**
**மருதனார்மடம் - சுன்னாகம்**

**2023 ஆம் ஆண்டுக்கான பரீட்சைகள்**

வட இலங்கைச் சங்கீத சபையினால் 2023 ஆம் ஆண்டுக்கான அறிமுறைப் பரீட்சைகள் ஏற்கனவே தீர்மானிக்கப்பட்டதன் படி 26.08.2023, 27.08.2023 (சனி. ஞாயிறு) ஆகிய தினங்களிலும் அகில இலங்கை ரீதியாக கீழ் குறிப்பிடப்பட்டுள்ள நேரசூசிக்கு அமைவாக நடைபெறவுள்ளது.

| திகதி | பாடம் | தரம் | நேரம் | |
|---|---|---|---|---|
| | | | காலை | மாலை |
| 26.08. 2023 சனிக் கிழமை | சங்கீதம் | 2,3,4,5 | 8.30-11.30 | |
| | சங்கீதம், பரதம், மிருதங்கம், பண்ணிசை,நாடகம் | 6 பகுதி I | 8.30-11.30 | |
| | மிருதங்கம் | 2,3,4,5 | | 13.00-16.00 |
| 27.08. 2023 ஞாயிற்றுக் கிழமை | பரதம் | 2,3,4,5 | 8.30-11.30 | |
| | சங்கீதம், பரதம், மிருதங்கம், பண்ணிசை, நாடகம் | 6 பகுதி II | 8.30-11.30 | |
| | பண்ணிசை, நாடகமும் அரங்கியலும் | 2,3,4,5 | | 13.00-16.00 |

(சி-7118)

[illegible] வட இலங்கை சங்கீதசபை, மருதனார்மடம்-சுன்னாகம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பாரதம்

## முகநூல் தரிசனம் 185

### சோகத்தை மறைத்து மக்களை சிரிக்க வைத்த சார்லி சாப்ளின்



உலகையே சிரிக்க வைத்தவர் சார்லி சாப்ளின். ஆனால், அவரது வாழ்க்கை சந்தோஷமாக இருந்ததே இல்லை. பிறந்ததில் இருந்தே துன்பங்கள், அவமானங்கள், தோல்விகள் இவைதான் அவரின் நண்பர்களாக இருந்தன. 1889 ஆம் ஆண்டு லண்டன் நகரில் சாப்ளின் பிறந்து, ஓரிரு வருடங்களிலேயே பெற்றோரிடையே சண்டை வந்து டிவோர்ஸ் ஆகி விடவே, பேசத் தொடங்கும் முன்பே, தாயுடன் சேர்ந்து மேடையில் பாட வேண்டிய நிர்ப்பந்தம்.

ஐந்து வயதுச் சிறுவனின் பாட்டுக்குக் கிடைத்த அமோக வரவேற்பு, ஏழு வயதிலேயே பறிபோனது. காரணம், அவரது தாயாரின் மனநிலை பாதிக்கப்பட்டதுதான். குடும்பத்தைக் காப்பாற்றுவதற்காக சலூன், கண்ணாடித் தொழிற்சாலை, மருத்துவமனை என எங்கெங்கோ வேலை பார்த்தவர், சில காலம் தந்தையுடன் சேர்ந்து மேடை நாடகங்களிலும் நடித்தார். ஆனால், தந்தை திடீரென இறந்து விடவே, மீண்டும் தொய்வு.

1910 இல் நாடகக் குழுவினருடன் அமெரிக்கா போனவருக்கு குறும்படங்களில் நல்ல பெயர் கிடைத்தது. அவரது முத்திரை கதாபாத்திரமான 'டிராம்ப்' (பேகி பேண்ட், தொப்பி, கைத்தடி, வளைந்த கால்கள்) பிரபலமானது. 'தி கிட்', படத்தில் தொடங்கிய வரேவற்பு, 'தி கிரேட் டிக்டேட்டர்' வரை நீடித்தது.

ஆனால், இந்தக் காலகட்டங்களில் குடும்ப வாழ்வு அவரை பாடாய்ப் படுத்தியது. 1918 இல் நடந்த முதல் திருமணம், இரண்டு வருடம் மட்டுமே நீடித்தது.

அதற்குப்பின் நடந்த இரண்டு திருமணங்களும்கூட சாப்ளினுக்குச் சோகத்தை மட்டுமே கொடுத்தன. 1942 இல் நான்காவது மனைவியாக ஓனெய்ல் அமைந்த பின் இல்லறத் தொல்லைகள் நின்றன.

1945 ஆம் ஆண்டு. சாப்ளின் ஒரு கம்யூனிஸ்ட் தீவிரவாதி என அமெரிக்க அரசு குற்றம் சாட்டியது. இரண்டாவது மனைவி ஜோன் பெர்ரியும் சாப்ளின் மீது குற்றச்சாட்டுகளைப் பதிவு செய்திருந்தார்.

அவர் தரப்பு நியாயங்களை அமெரிக்க அரசு கேட்காததால், வேறு வழியின்றி, 1952 இல் கனத்த இதயத்துடன் சுவிட்சர்லாந்தில் அடைக்கலமானார் சாப்ளின். 1972 ஆம் ஆண்டு காலச் சக்கரம் சுழல, அதே அமெரிக்க அரசு, 'உலகின் தலைசிறந்த நகைச்சுவை நடிகர்' விருது பெற சாப்ளினை அழைத்தது. பரிசினை ஏற்றுக் கொண்டாலும் அமெரிக்காவில் தங்க விருப்பமின்றி மீண்டும் சுவிட்சர்லாந்து கிளம்பினார் சாப்ளின்.

விமான நிலையத்தில் பத்திரிகையாளர்கள் சூழ்ந்து நின்று , "வாழ்நாள் முழுவதும் போர்க்களமாக இருந்தாலும் எப்படி ஜெயித்தீர்கள்? அது என்ன ரகசியம்?" எனக் கேட்டார்கள்.

சாப்ளின் சிரித்தார் "இந்த நிலை மாறிவிடும் என்பதை நான் எப்போதும் மறந்ததில்லை. அது இன்பமாக இருந்தாலும் சரி, துன்பமாக இருந்தாலும் சரி மாறிவிடும். இதோ இந்தக் கணத்திலும் கூட" என்றார்.

# பள்ளத்தாக்கில் கவிழ்ந்

# 12 பயணிகள் பரிதாபம

(அங்காரா)

**துருக்கி நகரமான யோஸ்காட் பகுதியில் உள்ள சாலையோர பள்ளத்தாக்கில் பேருந்து கவிழ்ந்து விபத்திற்குள்ளானதில் 12 பயணிகள் பரிதாபமாக உயிரிழந்தனர்.**

விபத்து தொடர்பில் மேலும் தெரியவருவதாவது, யோஸ்காட் பிரதான சாலையில் சிவாஸ் நகரிலிருந்து 240 கிலோமீற்றர் தொலைவில் உள்ள இஸ்தான்புல் நகருக்கு பயணிகள் பேருந்து சென்று கொண்டிருந்த வேளை திடீரென்று சாரதியின் கட்டுப்பாட்டை இழந்து சாலையோர பள்ளத்தாக்கில் விழுந்து விபத்துக்குள்ளானது. விபத்தில் 11 பயணிகள் சம்பவ இடத்திலேயே உயிரிழந்தனர்.

இது தொடர்பில் தகவலறிந்த மீட்புப்படையினர் சம்பவ இடத்திற்கு விரைந்து சென்றனர். அங்கு படுகாயமடைந்தவர்களை மீட்டு சிகிச்சைக்காக அருகிலுள்ள மருத்துவமனைக்கு அனுப்பி வைத்தன எனினும் சிகிச்சை பலனின்றி ஒருவர் உயிழந்தார்.

இதனால் உயிரிழப்பின் எண்ணிக்கை ஆக உயர்ந்தது. மேலும் 19 பயணிக சிகிச்சை பெற்று வருகின்றனர்.

இந்த விபத்திற்கான காரணம் தொடர்பி விசாரணை நடைபெற்று வருகிறது. (நி-5

# இராணுவ உளவு செயற்கைக்

# மீண்டும் ஏவ திட்டமிடும் வட



(பியாங்யாங்)

இராணுவ உளவு செயற்கைக் கோளை மீண்டும் விண்ணில் ஏவ வடகொரியா திட்டமிட்டுள்ளது. அமெரிக்கா-தென்கொரியா நாடுகள் இணைந்து போர்ப் பயிற்சியில் ஈடுபடுவதற்கு எதிர்ப்பு தெரிவித்து வடகொரியா ஏவுகணை சோதனை மேற்கொண்டு வருகின்றது.

கடந்த மே மாதம் இராணுவ உளவு செயற்கைக்கோளை வடகொரியா விண்ணில் ஏவியது. ஆனால் ரொக்கெட் கடலில் விழுந்து தோல்வியில் முடிந்தது.

முதல் ஏவுதலில் என்ன தவறு ஏற்பட்டது என்பது குறித்து ஆய்வு செய்யப்படும் என வடகொரியா தெரிவித்தது.

இந்நிலையில் உளவு செயற்கை கோளை மீண்டும் விண்ணில் ஏவ வடகொரியா திட்டமிட்

# ஜி-20 மாநாட்டில் பங்கேற்க ஜோ பைடன் இந்தியா பயணம்

## வெள்ளை மாளிகை அறிவிப்பு

(வோஷிங்டன்)

ஜி-20 மாநாட்டில் பங்கேற்பதற்காக அமெரிக்க ஜனாதிபதி ஜோ பைடன் செப்டெம்பர் 7 ஆம் திகதி இந்தியா செல்லவுள்ளார் என வெள்ளை மாளிகை அறிவித்துள்ளது.

ஜி -20 அமைப்புக்கு இந்த ஆண்டு இந்தியா தலைமை வகிக்கிறது. அந்த அமைப் பின் உச்சி மாநாடு டில்லியில் பிரகதி மைதானத்தில் செப்டெம்பர் 9 மற்றும் 10 ஆம் திகதிகளில் நடைபெறவுள்ளது.

குறித்த மாநாட்டில் ஜனாதிபதி பைடன் மற்றும் ஜி - 20 தலைவர்கள் உலகளாவிய பிரச்சினைகளைச் சமா [illegible]



கள் பற்றி விவாதிப்பார்கள்.

சுத்தமான எரிசக்தி மாற்றம் மற்றும் காலநிலை மாற்றத்தை எதிர்த்துப் போராடுவது உட்பட பல்வேறு விடயங்கள் குறித்து விவாதிக்கப்பட உள்ளன எனவும் தெரிவித்தார்.

ஜோ பைடன் அமெரிக்க ஜனாதிபதியாக பதவியேற்ற பிறகு முதல் முறையாக இந்தியா செல்லவுள்ளார் என்பது குறிப்பிடத்தக்கது. (நி-5)

# உ

# சு

(மெ

உக்

ரஷ்ய

யதாக

அமைச்

இது

காப்பு

டுள்ள

பகுதியி

கிழக்கே

ஏற்றிச்

போர்

வீழ்த்த

ஆ

காப்பு

எந்த

யில் ெ

கரு

தீவு உ

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வெளிநாடு



# ...ந்தது பேருந்து; ...மாக உயிரிழப்பு!

## துருக்கியில் துயரம்

...பார
...ம 12

...திலுள்ள
...த்தனர்.
...ர் உயிரி

...க்கை 12
...ணிகள்

...தாடர்பில்
(ரி-5)



# ...க்கோளை ...டகொரியா

...டுள்ளது. இது தொடர்பாக ஜப்பான் அதிகாரிகள் தெரிவிக்கையில், வடகொரியா வரும் நாட்களில் உளவு செயற்கைகோளை ஏவ திட்டமிட்டுள்ளது என தெரிவித்துள்ளனர்.

இன்று முதல் 30 ஆம் திகதிக்குள் செயற்கைக் கோளை விண்ணில் செலுத்தும் திட்டம் குறித்து வடகொரிய அதிகாரிகள் தெரிவித்ததாக ஜப்பான் கடலோர காவல் படை குறிப்பிட்டுள்ளது.

வடகொரியா எந்த வகையான செயற்கைக் கோளை ஏவ வுள்ளது என்பது குறித்து தெரிவிக்கவில்லை என்று கடலோர காவல் படை ஊட கப் பேச்சாளர் ஹிரோமுனே கிகுச்சி தெரிவித்துள்ளார்.

ஆனால் அந்த செயற்கைக் கோள் கடந்த மே மாதம் ஏவப்பட்ட உளவு செயற்கைக் கோளை போலவே இருக்கலாம் என்று நம்புகிறேன் என தெரிவித்தார். (ரி-5)

## பாகிஸ்தானில்

# 1,200 அடி உயரத்தில் பழுதடைந்த கம்பி வண்டி

## மாணவர்கள் உட்பட 8 பேரும் பாதுகாப்பாக மீட்பு

(இஸ்லாமபாத்)

பாகிஸ்தான் பள்ளத்தாக்கில் கம்பிவண்டியில் சுமார் 12 மணிநேரம் சிக்கியிருந்த 8 பேர் பாதுகாப்பாக மீட்கப்பட்டுள்ளனர்.

அவர்களில் 6 பேர் பாடசாலை மாணவர்கள் எனத் தெரிவிக்கப்படுகிறது.

நேற்று முன்தினம் காலை மாணவர்கள் பாடசாலைக்குச் சென்று கொண்டிருந்த கம்பிவண்டி பாதி வழியில் பழுதாகியது.

சுமார் 1,200 அடி உயரத்தில் சிக்கிக் கொண்ட அவர்களுக்கு உணவு, தண்ணீர், மருந்து ஆகியவை ஹெலிகொப்டர் மூலம் வழங்கப்பட்டன.

முதலில் இரு பிள்ளைகள் ஹெலிகொப்டரில் மீட்கப்பட்டனர்.

இருண்டுவிட்டதால் எஞ்சியோர் சிப்லைன் மூலம் கம்பிவண்டி தொங்கிக் கொண்டிருந்த கயிற்றின் வழி காப்பாற்றப்பட்டனர்.



அந்த 6 பாடசாலை மாணவர்களும் பதின்ம வயதுச் சிறுவர்கள் என்று தெரிவிக்கப்பட்டது.

அவர்களின் பாடசாலை மலைப்பகுதியில் இருப்பதாகவும் அங்கு செல்லப் பாதுகாப்பான பாதை ஏதும் இல்லாததால் கம்பிவண்டியைப் பயன்படுத்துவது வழக்கம் என்றும் பாடசாலைத் தலைவர் கூறினார்.

அதனையடுத்து பாகிஸ்தானில் மலைப்பகுதிகளில் உள்ள அனைத்துக் கம்பி வண்டிகளையும் சோதனைக்கு உட்படுத்த வேண்டும் என்று உத்தரவிடப்பட்டுள்ளது. அதேவேளை பாதுகாப்பற்றவை உடனடியாக மூடப்பட வேண்டும் என்றும் தெரிவிக்கப்பட்டது. (ரி-5)

## தாய்லாந்தின் புதிய பிரதமராக ஷ்ரத்தா நியமனம்




(பர்மா)

தாய்லாந்தின் புதிய பிரதமராக ஷ்ரத்தா தவிசின் நியமிக்கப்பட்டுள்ளார்.

பாராளுமன்றத்தில் நேற்று முன்தினம் இடம்பெற்ற வாக்கெடுப்பின் பின்னர் அவர் இப்பதவிக்கு நியமிக்கப்பட்டுள்ளார். (ரி-5)

## அமெரிக்காவில் புள்ளிகளே இல்லாத அரிய வகை ஒட்டகச்சிவிங்கி



(வோஷிங்டன்)

அமெரிக்காவின் டென்னஸி மாநிலத்தில் புள்ளிகளே இல்லாத அரிய வகை ஒட்டகச்சிவிங்கி பிறந்துள்ளது.

கடந்த மாதம் 31 ஆம் திகதி Bright விலங்குத் தோட்டத்தில் பிறந்த ஒட்டகச்சிவிங்கியின் உயரம் 6 அடி ஆகும்.

அந்தப் பெண் ஒட்டகச்சிவிங்கியின் உடல் பழுப்பு நிறத்தில் உள்ளது.

1972ஆம் ஆண்டு ஜப்பானில் புள்ளிகளே இல்லாத ஒட்டகச்சிவிங்கி ஒன்று பிறந்தது.

அதன் பின்னர் இந்த ஒட்டகச்சிவிங்கியே அமெரிக்காவில் பிறந்திருப்பதாக நம்பப்படுகிறது.

அதன் பெயர் இன்னும் தேர்ந்தெடுக்கப்படவில்லை.

தாயின் பராமரிப்பிலும் விலங்குத் தோட்டத்தின் ஊழியர்களின் பராமரிப்பிலும் அது நன்கு வளர்வதாகத் தெரிவிக்கப்படுகிறது.

ஒட்டகச்சிவிங்கியின் உரோமத்தில் இருக்கும் புள்ளிகள் காடுகளில் அவை மறைந்திருக்க உதவுகின்றன. (ரி-5)

# உக்ரைன் இராணுவ படகை சுட்டு வீழ்த்திய ரஷ்ய படை

(மொஸ்கோ)

...உக்ரைன் இராணுவ படகை ...ஷ்ய படைகள் சுட்டு வீழ்த்தி...யதாக ரஷ்யாவின் பாதுகாப்பு அமைச்சு தெரிவித்துள்ளது.

இது தொடர்பாக ரஷ்ய பாதுகாப்பு அமைச்சு வெளியிட்டுள்ள அறிக்கையில், கருங்கடல் பகுதியில் உள்ள பாம்பு தீவுக்கு கிழக்கே உக்ரைன் வீரர்களை ஏற்றிச் சென்ற படகு ரஷ்யாவின் போர் விமானம் மூலம் சுட்டு வீழ்த்தப்பட்டுள்ளது.

ஆனால் உக்ரைன் பாதுகாப்பு அமைச்சு இது தொடர்பாக ...ந்த கருத்தையும் இதுவரை ...யில் தெரிவிக்கவில்லை.

கருங்கடலில் உள்ள பாம்பு தீவு உக்ரைனின் ஒரு சிறிய



புறக்காவல் நிலையமாகும்.

போருக்கு மத்தியில் அங்கிருந்து தானியங்களை அனுப்ப உக்ரைனுடன் செய்து கொண்ட ஒப்பந்தத்தில் இருந்து ரஷ்யா கடந்த மாதம் வெளியேறியது.

இந்த நிலையில் அந்த பகுதியில் உக்ரைன் வீரர்களை ரஷ்யா சுட்டு வீழ்த்தியது மேலும் பதற்றத்தை ஏற்படுத்தியுள்ளது. (ரி-5)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பூநகரி பிரதேச செயலக பிரிவில்

# சுத்தமான குடிநீர் இன்றி அந்தரிக்கும் மக்கள்!

(கண்டாவளை)

**கிளிநொச்சி மாவட்டத்தின் பூநகரி பிரதேச செயலாளர் பிரிவுக்குட்பட்ட பொன்னாவெளி, வலைப்பாடு, வேரவில், கிராஞ்சி, பாலாவி போன்ற ஐந்து கிராமங்களிலும் சுத்தமான குடிநீர் இன்றி பெரும் சிரமங்களை எதிர்கொள்வதாக பிரதேச மக்கள் தெரிவித்துள்ளனர்.**

குறித்த பிரதேசத்தில் கடந்த 40 வருடங்களாக இந்த குடிநீர் பிரச்சினை காணப்படுவதாகவும் அதற்கு முன்னர் குறித்த இடங்களிலும் இங்கு காணப்பட்ட நன்னீர் கிணறுகளிலும் கடல் நீர் உட்புகுந்து உவர் நிலங்களாக மாறியுள்ளன.

இதனால் மேற்படி ஐந்து கிராமங்களிலும் குடிநீர் அற்ற நிலை காணப்படுகிறது. குறித்த பகுதிகளுக்கு தேசிய நீர் வழங்கல் வடிகாலமைப்பு சபையினால் இரண்டு கிணறுகளில் இருந்து நீர் விநியோகம் மேற்கொள்ளப்படுகின்ற போதும் அவை சீராக மேற்கொள்ளப்படுவதில்லை. அத்துடன் போதிய நீர் கிடைப்பதில்லையென்றும் குறித்த பகுதி மக்கள் தெரிவித்துள்ளனர்.

அதாவது வாரத்தில் ஒரு நாள் அல்லது இரண்டு நாட்களில் ஒரு சில மணித்தியாலங்கள் மாத்திரமே குடிநீர் விநியோகம் மேற்கொள்ளப்படுவதாகவும் பிரதேச மக்கள் சுட்டிக்காட்டியுள்ளனர்.

இவ்வாறு குடிநீரின்றி தாங்கள் பெரும் சிரமங்களை எதிர்கொள்வதாக தெரிவித்துள்ள பிரதேச மக்கள் தற்போதைய வறட்சிநிலை காரணமாக கால்நடைகள் நீரின்றி அலையும் அவல நிலை காணப்படுவதாகவும் சுட்டிக்காட்டி உள்ளனர்.(4-6-315)

# அமெரிக்க தூதுவர் ஜூலிசங் யாழ்.மாவட்டத்திற்கு விஜயம்



(யாழ்ப்பாணம்)

இலங்கைக்கான அமெரிக்க தூதர் ஜூலிசங் யாழ்ப்பாண மாவட்டத்திற்கு விஜயம் செய்துள்ளார்.

யாழ்ப்பாணம் சர்வதேச விமான நிலையம் ஊடாக நேற்று புதன்கிழமை யாழ்ப்பாணத்துக்கு விஜயம் செய்த அமெரிக்க தூதர், பல்வேறு தரப்புக்களையும் சந்தித்து கலந்துரையாடவுள்ளார்.

முன்னதாக வடக்கு மாகாண ஆளுநர் பி.எஸ்.எம். சார்ள்ஸை சந்தித்து வடக்கு மாகாணத்திற்கான சமூகப் பொருளாதார சவால்கள் மற்றும் வாய்ப்புகள் தொடர்பாக கலந்துரையாடினார்.

தொடர்ந்து, யாழ்ப்பாணம் பொது நூலகத்துக்கு, விஜயம் செய்து அதனை பார்வையிட்டார். (4-6-33-104)

# 13 வர்த்தகர்களுக்கு ரூ.1 லட்சம் தண்டம்

(கண்டாவளை)

கிளிநொச்சி பகுதியில் காலாவதியான உணவுப் பொருட்களை விற்பனைக்காக காட்சிப்படுத்தியமை மற்றும் விலைக் காட்சிப்படுத்தாமல் பொருட்களை விற்பனை செய்தமை தொடர்பில் கைது செய்யப்பட்ட 13 வர்த்தகர்களுக்கு சுமார் ஒரு இலட்சம் ரூபாய் தண்டப் பணம் விதிக்கப்பட்டுள்ளது.

கிளிநொச்சி பகுதியில் விலை கட்டுப்பாட்டு பிரிவினரால் மேற்கொள்ளப்பட்ட திடீர் சோதனை நடவடிக்கைகளின் போது காலாவதியான உணவுப் பொருட்களை விற்பனைக்கு காட்சிப்படுத்தியமை விலை காட்சிப்படுத்தாமல் பொருட்களை விற்பனை செய்தமை என பல்வேறு குற்றச்சாட்டுகளில் 13 வர்த்தகர்கள் கைது செய்யப்பட்டு நேற்று முன்தினம் கிளிநொச்சி மாவட்ட நீதிவான் நீதிமன்றில் நீதிமன்ற நீதிவான் எஸ். சுபராஜினி முன்னிலையில் ஆஜர்ப்படுத்தப்பட்டனர்.

இதன்போது ஏழு வர்த்தகர்களுக்கு தலா பத்தாயிரம் ரூபாய் தண்டப்பணம் விதிக்கப்பட்டதுடன் ஆறு வர்த்தகர்களுக்கு தலா ஐயாயிரம் வீதம் முப்பது ஆயிரம் ரூபாய் தண்டப்பணம் விதிக்கப்பட்டது. (4-6-315)

# போதைப்பொருளைக் கட்டுப்படுத்துமாறு வவுனியாவில் சடலத்துடன் ஆர்ப்பாட்டம்



(குருமன்காடு)

போதைப்பொருள் பாவனையை கட்டுப்படுத்த கோரியும் இறந்தவருக்கு நீதி கோரியும் வவுனியாவில் சடலத்துடன் ஆர்ப்பாட்டம் ஒன்று நேற்று முன்தினம் முன்னெடுக்கப்பட்டது. கடந்த வெள்ளிக்கிழமை இரவு வவுனியா, பூந்தோட்டம் பகுதியில் உள்ள மது பானசாலைக்கு சென்றிருந்த இளம் குடும்பஸ்தரை அங்கு மது அருந்திக் கொண்டிருந்த இருவர் தாக்கியதில் அவர் படுகாயமடைந்தார்.

படுகாயமடைந்த குடும்பஸ்தர் வவுனியா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டிருந்தார்.

எனினும் அவர் சிகிச்சை பலனின்றி கடந்த ஞாயிற்றுக்கிழமை மரணமடைந்தார்.

அவரது இறுதிக்கிரியையின் போது சடலத்தை எடுத்து வந்த அக் கிராம மக்களும் கிராம பொதுஅமைப்புக்களும் சடலத்துடன் போதைப்பொருள் பாவனைக்கு எதிராகவும் இறந்தவருக்கு நீதி கோரியும் பதாகைகளை ஏந்தியவாறும் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர். ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டவர்கள் "ஐஸ் - கஞ்சா- மாபா- ஹெரோயின் - போதை மாத்திரை என்பவற்றை தடை செய், தொடர்ச்சியாக அடாவடித்தனம் செய்வோரை கைது செய், மாணவர் சமூகத்தை சீரழிக்கும் போதைப் பொருட்களை தடை செய்" என எழுதப்பட்ட பதாகைகளை ஏந்தியிருந்தனர். (நி-6-250)

# மது போதையில் சாரத்தியம் 25 ஆயிரம் அபராதம்

(கண்டாவளை)

கிளிநொச்சி பகுதியில் மது போதையில் வாகனம் செலுத்திய இரண்டு பேருக்கு இருபத்தையாயிரம் ரூபாய் தண்டப் பணம் விதிக்கப்பட்டுள்ளதுடன் சாரதி அனுமதிப்பத்திரங்களும் மூன்று மாத காலத்துக்கு இடைநிறுத்தி வைக்கப்பட்டுள்ளன.

கிளிநொச்சி பகுதியில் மது போதையில் வாகனம் செலுத்திய இரண்டு பேரை கைது செய்து அவர்களுக்கு எதிரான வழக்கு பதிவு செய்த கிளிநொச்சி பொலிஸார் நேற்று முன்தினம் கிளிநொச்சி மாவட்ட நீதிவான் நீதிமன்றில் நீதிவான் எஸ்.சுபராஜினி முன்னிலையில் அவர்களை ஆஜர்ப்படுத்தினர்.

இதன்போது அவர்களுக்கு தலா இருபத்தி ஐயாயிரம் ரூபா தண்டப்பணம் விதிக்கப்பட்டதுடன் சாரதி அனுமதி பத்திரங்களும் மூன்று மாத காலத்துக்கு இடைநிறுத்தி வைக்கப்பட்டுள்ளன. (4-6-315)



கலாசார அலுவல்கள் திணைக்களத்தின் அறிவுறுத்தலுக்கமைய சிறுதொழில் முயற்சி அபிவிருத்திப் பிரிவு மற்றும் கிறிசலிஸ் நிறுவனம் ஆகியவற்றின் நிதி அனுசரணையில் கிளிநொச்சி மாவட்ட செயலகம் நடத்தும் உள்ளூர் உற்பத்தியாளர்களின் பாரம்பரிய உணவுப் பொருட்களின் கண்காட்சியும் விற்பனையும் நேற்று புதன்கிழமை நடைபெற்றது.

(படம்:யதுபாஸ்கரன், தேவானந்தன்)

# சுண்ணக்கல் அகழ்வு போராட்டக்காரரை சந்தித்த தேசிய மீனவர் சங்கம்

## கொழும்பில் போராட்டம் நடத்தவும் ஒத்துழைப்பு



(அக்கராயன்)

கிளிநொச்சி பூநகரி பொன்னாவெளியில் சுண்ணக்கல் அகழ்விற்கு எதிராக போராட்டத்தில் ஈடுபட்டுள்ள மக்களை தேசிய மீனவர் ஒத்துழைப்பு சங்கத்தினர் நேற்று முன்தினம் சந்தித்து கலந்துரையாடினர்.

இதன் போது சுண்ணக்கல் அகழ்வு இடம்பெற்றால் தமது கிராமம் எதிர்கொள்ளும் அழிவுகள் தொடர்பாக போராட்டத்தில் ஈடுபட்ட மக்களினால் மீண்டும் மீனவர் சங்கத்தினருக்கு தகவல்கள் தெரிவிக்கப்பட்டன.

அதனையடுத்து மக்களின் பிரச்சினைகளை உரியவர்களிடம் தெரிவிப்பதாகவும் பொன்னாவெளி மக்கள் கொழும்பில் ஆர்ப்பாட்டம் நடத்துவதற்கு தமது சங்கம் ஒத்துழைப்பு வழங்கும் எனவும் தேசிய மீனவர் ஒத்துழைப்பு சந்கத்தினர் தெரிவித்துள்ளனர். பொன்னாவெளியில் சுண்ணக்கல் அகழ்வுக்கு எதிரான போராட்டம் நேற்றுடன் 21 ஆவது நாளாக தொடர்கின்றமை குறிப்பிடத்தக்கது. (நி-350)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# ஆவணி மாத இராசி பலன்கள்

## 18.08.2023 - 17.09.2023



**எந்தப் பொறுப்பைக் கொடுத்தாலும் வெற்றிகரமாக முடிக்கும் கும்ப இராசி வாசகர்களே!**

ஆவணி மாதக் கிரக நிலைகளை ஆராய்ந்து பார்க்கும் பொழுது, மாதத் தொடக்கத்தில் உங்கள் இராசிநாதன் சனி வக்கிரம் பெற்று சஞ்சரிக்கிறார். சில நாட்கள் கழித்து அந்த வக்கிர இயக்கத்தோடு விரய ஸ்தானத்திற்கும் வருகிறார். எனவே ஆரோக்கியத் தொல்லை அதிகரிக்கும். எவ்வளவு தான் வருமானம் வந்தாலும் பற்றாக் குறையும் ஏற்படும். திட்டமிட்ட காரியங்களை குறிப்பிட்டபடி செய்ய இயலாது. வழிபாட்டினை மேற்கொள்வதன் மூலம் வக்கிரச் சனியின் காலத்தில் வளர்ச்சியைத் தக்க வைத்துக் கொள்ள இயலும்.

### கடக - சுக்கிரன்

ஆவணி 1 ஆம் திகதி, கடக இராசிக்கு சுக்கிரன் செல்கிறார். உங்கள் இராசிக்கு 4, 9 ஆகிய இடங்களுக்கு அதிபதியானவர் சுக்கிரன். அவர் 6 ஆம் இடத்திற்கு வரும் பொழுது ஆரோக்கியத் தொல்லைகள் அதிகரிக்கும். எதையும் தன்னிச்சையாகச் செய்ய இயலாது. மனஅழுத்தம், நிம்மதியின்மை போன்றவை ஏற்படலாம். தொழிலில் பங்குதாரர்கள் விலகிக் கொள்வதாகச் சொல்லி அச்சுறுத்துவர். "நினைத்தது ஒன்றும் நடந்தது ஒன்றுமாக இருக்கின்றதே" என்று கவலைப்படுவீர்கள். அலுவலகத்தில் உள்ளவர்களிடம் வாக்குவாதம் செய்ய வேண்டாம். வீண் விரயங்களில் இருந்து விடுபட சுபவிரயங்களை மேற்கொள்ளுங்கள். வாகனங்களில் செல்லும் பொழுது கவனம் தேவை.

### கன்னி - செவ்வாய்

ஆவணி 2 ஆம் திகதி, கன்னி இராசிக்கு செவ்வாய் செல்கிறார். "கன்னி செவ்வாய் கடலும் வற்றும்" என்பது பழமொழி. எனவே மிகுந்த பொருள் விரயம் ஏற்படும் நேரமிது. குறைந்த செலவில் முடிவடைய வேண்டிய காரியம் அதிக செலவில் முடியும். ஒரு வேலையை ஒரு முறைக்கு இருமுறை செய்யும் நிர்பந்தம் ஏற்படும். உங்கள் இராசிக்கு 3, 10 ஆகிய இடங்களுக்கு அதிபதியானவர் செவ்வாய் என்பதால் தொழில் மற்றும் உத்தியோகத்தில் கவனத்தோடு இருப்பது நல்லது. வம்பு, வழக்குகள் வாசல் தேடி வரலாம். அஷ்டமத்துச் செவ்வாய் மாறும் வரை முறையான வழிபாடுகளை மேற்கொள்ளுங்கள்.

### மகர - சனி

சனி பகவான் ஆவணி 7 ஆம் திகதி, வக்கிர இயக்கத்திலேயே மகர இராசிக்கு செல்கிறார். உங்கள் இராசிநாதன் விரய ஸ்தானத்திற்கு வரும் போது, கூடுதல்




விரயங்களைச் சந்திக்க நேரிடும். இடமாற்றம், வீடு மாற்றம், உத்தியோக மாற்றம் போன்றவற்றில் கவனம் செலுத்துவீர்கள். வியாபாரப் போட்டி அதிகரிக்கும். வாடிக்கையாளர்களை அனுசரித்துச் செல்வது நல்லது. கோபத்தின் காரணமாக பல நல்ல வாய்ப்புகளை நழுவவிட நேரிடும். "விரிவு செய்த தொழிலை தொடர்ந்து நடத்த மூலதனம் இல்லையே" என்று கவலைப்படுவீர்கள்.

### புதன் வக்கிர நிவர்த்தி

சிம்மத்தில் சஞ்சரித்து வரும் புதன், ஆவணி 15 ஆம் திகதி வக்கிர நிவர்த்தியாகிறார். உங்கள் இராசிக்கு பஞ்சம - அஷ்டமாதிபதியான புதன் பலம் பெறும் இந்த நேரம், பிள்ளைகளின் சுபகாரியப் பேச்சுக்கள் கைகூடும். பூர்வீக சொத்துக்கள் சம்பந்தமான பாகப்பிரிவினைகள் நடைபெற்றால் அது திருப்தி தரும். தேகநலன் படிப்படியாகக் குணமாகும். வெளிநாட்டில் இருந்து தாய்நாடு திரும்ப முடியாமல் தத்தளிப்பவர்களுக்கு இப்பொழுது நல்ல தகவல் கிடைக்கும். பொதுவாழ்வில் உள்ளவர்களுக்கு எதையும் யோசித்துச்செய்வது நல்லது. தொழில் செய்பவர்களுக்கு உழைப்பிற்கேற்ற பலன் கிடைக்கும். உத்தியோகத்தில் உள்ளவர்களுக்கு அதிகாரிகளின் ஆதரவு திருப்தி தராது. கலைஞர்களுக்கு அதிக முயற்சியின் மூலம் புதிய ஒப்பந்தங்கள் கிடைக்கும். பெண்களுக்கு வரவைக் காட்டிலும் செலவு இருமடங்காக உயரும். பிள்ளைகளை உங்கள் மேற்பார்வையில் வைத்துக் கொள்வது நல்லது. பணிபுரியும் பெண்களுக்கு வேலைப்பளு கூடும்.

## வாகனங்களில் செல்லும்போது கவனம் தேவை!

**ஜோதிடக் கலாமணி சிவல்புரி சிங்காரம்**



**நன்மை தீமைகளைப் பற்றி ஆராய்ந்து முடிவெடுக்கும் மீன இராசி வாசகர்களே!**

ஆவணி மாதக் கிரக நிலைகளை ஆராய்ந்து பார்க்கும் பொழுது, மாதத் தொடக்கத்தில் உங்கள் இராசிநாதன் குரு, ராகுவோடு இணைந்து சஞ்சரிக்கிறார். "ராகுவைப் போல் கொடுப்பானுமில்லை" என்பது பழமொழி. அப்படிப்பட்ட ராகுவோடு இணைந்து குரு சஞ்சரிப்பதால் பொருளாதாரத்தில் நிறைவு ஏற்படும். இருப்பினும் இம்மாதம் உங்கள் இராசிநாதன் குரு வக்கிரமடைகிறார். லாப ஸ்தானத்திற்கு வரப்போகும் சனியும் வக்கிர இயக்கத்தில் இருக்கிறார். எனவே இம்மாத பிற்பாதியில் பொருளாதாரத்தில் பற்றாக்குறையும் புதிய முயற்சிகளில் தாமதமும் ஏற்படலாம்.

### கடக - சுக்கிரன்

ஆவணி 1 ஆம் திகதி, கடக இராசிக்கு சுக்கிரன் செல்கிறார். உங்கள் இராசிக்கு 3, 8 ஆகிய இடங்களுக்கு அதிபதியானவர் சுக்கிரன். அவர் பஞ்சம ஸ்தானத்திற்கு வரும் போது பிள்ளைகளின் எதிர்கால நலன் கருதி செலவிடுவீர்கள். சம்பள உயர்வின் காரணமாக ஒருசிலர் குடும்பத்தை விட்டுப் பிரிந்து நீண்ட தூரங்களில் வேலை பார்க்கும் சூழல் அமையும். ஆடை, ஆபரணச் சேர்க்கை உண்டு. இல்லத்தில் சுப செலவுகள் அதிகரிக்கும். உடன்பிறப்புகளின் திருமண முயற்சிகளை முன்னின்று நடத்துவீர்கள்.

### கன்னி - செவ்வாய்

ஆவணி 2 ஆம் திகதி, கன்னி இராசிக்கு செவ்வாய் செல்கிறார். உங்கள் இராசிக்கு 2, 9 ஆகிய இடங்களுக்கு அதிபதியானவர் செவ் வாய். அவர் சப்தம ஸ்தானத்திற்கு வரும்பொழுது பொருளாதார மேன்மை ஏற்படும். புனிதப் பயணங்கள் அதிகரிக்கும். கொடுத்த வாக்கைக் காப்பாற்றுவீர்கள். இடம், பூமி வாங்கும் யோகம் உண்டு. வீடு, கட்டுவது, கட்டிய வீட்டைப் பழுது பார்ப்பது போன்றவற்றில் கவனம் செலுத்துவீர்கள். அதிகாரப் பதவியில் உள்ளவர்களின் ஆதரவு கிடைக்கும்.

### மகர - சனி

சனி பகவான் ஆவணி 7 ஆம் திகதி, மகர இராசிக்கு வக்கிர இயக்கத்தில் செல்கிறார். இதுவரை உங்கள் இராசிக்கு விரயச் சனியாக இருந்த சனிபகவான் இப்பொழுது லாபச் சனியாக மாறுவார். சனி வக்கிர இயக்கத்தில் சஞ்சரித்தாலும் வளர்ச்சியில் பாதிப்பு ஏற்படாது. வாக்கிய கணித ரீதியாக வரும் இந்தச் சனி




மாற்றம் ஓரளவு நன்மை செய்யும். தொழில் வளம் சிறப்பாக இருக்கும். வெளிநாட்டில் இருந்து அழைப்புகள் வரலாம். சனியின் பார்வை உங்கள் இராசியில் பதியப்போவதால் ஆரோக்கியத் தொல்லை அதிகரிக்கும். பணிபுரியும் இடத்தில் கொஞ்சம் பக்குவமாக நடந்து கொள்ளுங்கள். மேலதிகாரிகளின் பகையை வளர்த்துக் கொள்ள வேண்டாம்.

### புதன் வக்கிர நிவர்த்தி

சிம்மத்தில் சஞ்சரித்து வரும் புதன், ஆவணி 15 ஆம் திகதி வக்கிர நிவர்த்தியாகிறார். உங்கள் இராசிக்கு 4, 7 ஆகிய இடங்களுக்கு அதிபதியானவர் புதன். கேந்திராதி பத்ய தோஷம் பெற்ற புதன் வக்கிரம் பெறுவது யோகம்தான். குடும்ப ஒற்றுமை பலப்படும். கல்யாணக் கனவுகள் நனவாகும். இடம், வீடு சம்பந்தப்பட்ட வகையில் தாமதப்பட்ட பத்திரப் பதிவு தடையின்றி நடைபெறும். வெளிநாட்டு வணிகம் பலன்தரும். உத்தியோகத்தைப் பொறுத்தவரை இலாகா மாற்றங்களும் சம்பள உயர்வும் எதிர்பார்த்த படி கிடைக்கும். பொதுவாழ்வில் உள்ளவர்களுக்கு பொறுமையும் நிதானமும் தேவை. தொழில், வியாபாரம் செய்பவர்கள் போட்டிகளுக்கு மத்தியில் முன்னேற்றம் காண வேண்டிய சூழ்நிலை ஏற்படும். உத்தியோகத்தில் உள்ளவர்களுக்கு மேலதிகாரிகளுடன் கருத்து வேறுபாடுகள் அதிகரிக்கலாம். கலைஞர்களுக்கு மாதத்தின் பிற்பகுதியில் எதிர்பார்ப்புகள் நிறைவேறும். மாணவ - மாணவியர்களுக்கு அதிக முயற்சியும் கல்வியில் கூடுதல் கவனமும் செலுத்த வேண்டிய நேரம் இது. பெண்களுக்குப் பிரச்சினைகளை சந்திக்கக்கூடிய சூழ்நிலை உருவாகும். யாரையும் நம்பி எதையும் செய்ய இயலாது.

(முற்றும்)

## ஆடை, ஆபரண சேர்க்கையுண்டு!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கல்கியின் பாகம் - 2

# பொன்னியின் செல்வன்

காவியத் தொடர் 264





அதைப் பார்த்த உடனே வந்தியத்தேவனுக்கும் குதிரை மேலிருந்து குதிக்கத் தோன்றியது. குதித்துப் பூங்குழலியைப் பின்தொடர்ந்து பிடிப்பதற்கு ஓட வேண்டும் என்று தோன்றியது. அவ்வாறே அவளைத் துரத்திக் கொண்டு ஓடினான். இந்த அர்த்தமற்ற செயலின் காரண காரியங்களை யார் கண்டுபிடித்துச் சொல்ல முடியும்? ஆயிரம் பதினாயிரம் ஆண்டுகளாகத் தொடர்ந்து வந்த மனித குலத்தின் பரம்பரை இயற்கைதான் பூங்குழலியை ஓடச் செய்தது என்றும், அதுவே வந்தியத்தேவனைத் துரத்திப் பிடிக்கச் செய்தது என்றும் சொல்ல வேண்டியதுதான்.

**இரண்டாம் அத்தியாயம்**
**சேற்றுப் பள்ளம்**

காட்டிலும் மேட்டிலும், கல்லிலும் முள்ளிலும் அந்தப் பெண்ணைத் தொடர்ந்து வந்தியத்தேவன் ஓடினான். ஒருசமயம் அவள் கண்ணுக்குத் தெரிந்தாள். மறு கணத்தில் மறைந்தாள். இனி அவளைப் பிடிக்க முடியாது என்று தோன்றியபோது மறுபடியும் கண்ணுக்குப் புலப்பட்டாள். மாய மாரீசனைத் தொடர்ந்து இராமர் சென்ற கதை வந்தியத்தேவனுக்கு நினைவு வந்தது. ஆனால் இவள் மாயமும் அல்ல மாரீசனும் அல்ல இவளுடைய கால்களிலே மானின் வேகம் இருக்கிறது என்பது மட்டும் நிச்சயம். அம்மம்மா! என்ன விரைவாக ஓடுகிறாள்? 'எதற்காக இவளைத் தொடர்ந்து ஓடுகிறோம், இது என்ன பைத்தியக்காரத்தனம்?' என்று எண்ணினான்.

உடனே அதற்கு ஒரு காரணமும் கற்பித்துக் கொண்டான். கோடிக்கரை நெருங்க நெருங்க, சேந்தன் அமுதன் வர்ணித்த மங்கையின் நினைவு அவனுக்கு அடிக்கடி வந்து கொண்டிருந்தது. இவள் அந்தப் பூங்குழலியாகத்தான் இருக்க வேண்டும்.

இவளுடன் சிநேகம் செய்து கொண்டால் வந்த காரியம் நிறைவேறுவதற்கு அனுகூலமாயிருக்கும். அத்துடன் கலங்கரை விளக்கத்துக்குப் போக வழி கேட்டும் தெரிந்து கொள்ளலாம். தொலைதூரத்தில் வரும் போதே அவர்களுக்குக் கலங்கரை விளக்கின் உச்சி தெரிந்தது.

ஆனால் அதை நெருங்குவது எளிதாயில்லை. காட்டுக்குள் புகுந்ததும் கலங்கரை விளக்கு தெரியவேயில்லை. காட்டுக்குள்ளே சுற்றிச் சுற்றி வருவதாக ஏற்பட்டதே தவிர வழி அகப்படவில்லை. இந்தச் சமயத்திலே தான் குழகர் கோயிலின் மதில் சுவரின் மேல் பூங்குழலியை வந்தியத் தேவன் கண்டான்.

அவளைப் பிடித்து வழி கேட்கலாம் என்று பார்த்தால், அவள் இப்படி மாய மானைப் போல் பிடிபடாமல் ஓடுகிறாளே? இவளை இப்படியே விட்டு விட்டுத் திரும்ப வேண்டியதுதான்? ஆனால் ஓட்டப் பந்தயத்தில் கூட ஒரு பெண்ணுக்குத் தோற்பது என்றால், அதுவும் மனத்துக்கு உகந்ததாயில்லை.

ஆ! அதோ திறந்தவெளி வந்துவிட்டது. சற்றுத் தூரத்தில் நீலக்கடல் தெரிகிறது. விரிந்து பரந்து அமைதி குடிகொண்ட அந்தக் கடலின் தோற்றம் என்ன அழகாயிருக்கிறது! அதோ கலங்கரை விளக்கமும் தெரிகிறது.

அதன் உச்சியில் இப்போது ஜோதி கொழுந்து விட்டு எரிகிறது. அதன் செந்நிறக் கதிர்கள் நாலா பக்கமும் பரவி விழுந்து விசித்திர ஜால வித்தைகள் புரிகின்றன.

இந்த இடத்தில் இந்தப் பெண்ணைப் பின்தொடர்வதை விட்டுவிட்டுக் கலங்கரை விளக்கை நோக்கிப் போகலாமா? கூடாது! கூடாது! இந்தத் திறந்த வெளியில் இவளை ஓடிப் பிடிப்பது சுலபம். இங்கே அவ்வளவு மணலாகக் கூட இல்லை. கால் மணலில் புதையவில்லை. பூமியில் புல் முளைத்துக் கெட்டிப் பட்டிருக்கிறது. சில இடங்களில் சேறு காய்ந்து பொறுக்குப் படர்ந்திருக்கிறது. இங்கேயெல்லாம் தடங்கலின்றி ஓடலாம். அந்தப் பெண்ணை இலகுவாய்ப் பிடித்துவிடலாம்! மேலும் அவள் கடலை நோக்கியல்லவா ஓடுகிறாள்? எவ்வளவு ஓடினாலும் முடிவில் கடலோரத்தில் சென்று அவள் நின்றுதானே ஆக வேண்டும்! ஒரு வேளை இந்த விந்தையான பெண் கடலிலேயே முழுகி மறைந்து விடுவாளோ! அடடா! குதிரையிலேயே ஏறி வராமற் போனோமே? அப்படி வந்திருந்தால் இந்தத் திறந்த வெளியில் ஒரு நொடியில் இவளைப் பிடித்து விடலாமே.

(தொடரும்...)



# சிறுவர் அரங்கம்

## பட்டாணி



ஒரு நாள் ஒரு மூதாட்டி மண் அடுப்பில் வைத்து சமையல் செய்து கொண்டிருந்தாள். அவள் அடுப்பில் வைத்திருந்த தண்ணீர் கொதித்ததால் அதற்குள் சில காய்கறிகளை போட்டாள். அப்போது பட்டாணி அந்த சட்டியிலிருந்து வெளியே குதித்து வந்து, "என்னை வேக வைக்க வேண்டாம். என்னை சமைக்க வேண்டாம்" என்று கத்தியது.

"மூதாட்டியே நீ மரியாதையாக பழையபடி சட்டிக்குள் போகிறாயா? இல்லை உன்னை நசுக்கட்டுமா?" என்றாள்.

ஆனால் மூதாட்டியின் உத்தரவை பட்டாணி கேட்கவில்லை. அங்கிருந்து வேகமாக ஓட்டம் பிடித்தது. அப்போது நில் நில் ஓடாதே உன்னுடன் நானும் வருகிறேன் என்று இன்னொரு குரல் கேட்டது. பட்டாணி திரும்பிப் பார்த்தது.

அப்படிக் கத்தியது எரிந்து கொண்டிருந்த ஒரு துண்டு நிலக்கரி.

"அடுப்பிற்குள் இருந்தால் எனக்கு மூச்சு முட்டுகிறது. அதனால் நானும் உன்னுடன் வெளியில பார்க்க வருகிறேன்" என்றது நிலக்கரி.

"என்ன வெளியுலகைப் பார்க்கப் போகிறாயா?. அப்படியென்றால் என்னையும் உங்களுடன் அழைத்துச் செல்லுங்கள்". என்றது கீழே கிடந்த வைக்கோல் ஒன்று.

"சரி, வா போகலாம்" என்று நிலக்கரியும் பட்டாணியும் வைக்கோலை தங்களுடன் கூட்டு சேர்த்துக் கொண்டன.

மூன்றும் சேர்ந்து நடந்தபோது சாலையின் ஓரிடத்தில் விரிசல் விட்டிருந்தது. அந்த இடத்தில் தண்ணீர் ஓடிக் கொண்டிருந்தது.

"இனி நாம் தொடர்ந்து செல்ல முடியாது. அதனால் நான் அடுப்பிற்கே போய் விடுகிறேன்" என்றது நிலக்கரி.

"அப்படியென்றால் நானும் அடுப்பில் எரியும் சட்டிக்குள் போய் விடுவேன்" என்றது பட்டாணி.

"நண்பர்களே சோர்ந்து விடாதீர்கள். நான் இந்த பாலத்திற்கு (விரிசல்) இணைப்பாக இருக்கிறேன். நீங்கள் இருவரும் என்மீது ஏறி நடந்து மறுபக்கம் போய்விடலாம்" என்று நம்பிக்கை யூட்டியது வைக்கோல்.

முதலில் பட்டாணி, வைக்கோல் மீது ஏறி விரிசலின் மறுபக்கத்தை அடைந்தது. ஆனால் எரிந்து கொண்டிருந்த நிலக்கரி, வைக்கோல் மீது ஏறியதும் அது தீப் பிடித்துக் கொண்டது. இதனால் இரண்டும் சேர்ந்து தண்ணீருக்குள் விழுந்தன.

"ஷ்..ஷ்..ஷ்"தன் மீது எரிந்து கொண்டிருந்த நெருப்பு அணைந்ததும் நிலக்கரி பெருமூச்சு விட்டது.

அந்த விநோத சத்தத்தைக் கேட்ட பட்டாணி சிரிக்க ஆரம்பித்தது. தொடர்ந்து அது பலமாகச் சிரித்ததால் வெடித்து சிதறி அதிலிருந்த ஒவ்வொரு பட்டாணியும் ஓட ஆரம்பித்தன.

அந்தப் பட்டாணிகள் அனைத்தும் ஒரு தையல்கடையை நோக்கிச் சென்றன. தையல்காரரிடம் தயவு செய்து எங்களை ஒன்றாக வைத்து தைத்து விடுங்கள் என்று கேட்டுக் கொண்டன.

தையல்காரரும் பட்டாணிகளின் வேண்டுகோளை ஏற்று ஒரு தடித்த நூல் கொண்டு தைத்து விட்டார்.

இதனால் தான் அன்று முதல் பட்டாணியை நாம் உரிப்பதற்கு அதன் மேல் தோலில் நூல் போல் உள்ள பகுதியை உரிக்க வேண்டியிருக்கிறது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அறிவில்லாத சமயவாதிகள் சமயக்கொள்கை களுக்காகச் சண்டையிட்டும்.ஆனால்,தர்ம வழி யில் நடப்பவன் ஒருநாளும் தவறியவனாகான். - போப்

வலம்புரி
TP: 021 222 3378
website : www.valampurii.lk

## கலவரத்தை ஏற்படுத்தும் சிந்தனையில் சிங்களப் பேரினவாதிகள்

குருந்தூர்மலையில் நடந்த பொங்கல் பேரினவாதிகளின் மனநிலை எவ்வாறாக உள்ளதென்பதைக் காட்டி நிற்கிறது.

பல வருடங்களாக யுத்தம் நடந்த இந்த நாடு இப்போது கந்தறுநிலைக்கு வந்துவிட்டது.

இனி இலங்கை மீண்டெழ வேண்டுமாயின், உலக நாடுகளின் உதவி கட்டாயம் தேவை என்ற சூழ்நிலையை உருவாக்கியுள்ளது.

இது ஒருபுறமிருக்க, உலக நாடுகள் உதவி செய்தாலும் இலங்கை மண்ணில் சமாதானம் ஏற்படாவிடில், பொருளாதார மீட்சி என்பது ஒருபோதும் சாத்தியமாகாது.

இந்த உண்மை அனைவருக்கும் தெரிந்ததே. இதுபற்றி மேலதிக பிரசாரங்கள் தேவையற்றவை.

இருந்தும் நாட்டில் இன ஒற்றுமையை ஏற்படுத்துவதற்கான ஏதுக்கள் எதுவும் இது வரை தெரியவில்லை.

இனியும் அந்த ஏதுக்கள் ஏற்படுவதற்கான சாத்தியங்களும் இல்லை.

அவ்வாறாயின் பொருளாதார மீட்சி என்பது இலங்கையில் சாத்தியமாகாதென்பது நிறுதிட்டமாகிறது.

இவை ஒருபுறமிருக்க, நாட்டின் பொருளாதார நெருக்கடி நிலை பற்றி இம்மியும் சிந்திக்காத பௌத்த சிங்களப் பேரினவாதம் வடக்குக் கிழக்கில் விகாரைகளை அமைப்பதிலும் தமிழர்களின் வரலாற்றுச் சிறப்புமிக்க இடங்களைக் கபளீகரம் செய்வதிலும் தீவிரமாக ஈடுபட்டுள்ளது.

இதன் ஒரு நகர்வுதான் குருந்தூர்மலையில் சட்டத்தைப் புறந்தள்ளி அமைக்கப்படுகின்ற விகாரையாகும்.

நில அபகரிப்புக்கும் சட்டவிரோதமாக விகாரைகள் அமைக்கப்படுவதற்கும் எதிராகத் தமிழ் மக்கள் நீதிமன்றத்தை நாடுவது பௌத்த சிங்களப் பேரினவாதிகளுக்கு கடுப்பை ஏற்படுத்தியுள்ளது.

அதிலும் நீதிமன்றத்தின் தீர்ப்பின் பிரகாரம் குருந்தூர்மலை ஆதிசிவனுக்கு நடந்த பொங்கல் மிகப்பெரும் தலைகுனிவை தமக்கு ஏற்படுத்திவிட்டதாக சிங்களப் பேரினவாதிகள் புழுங்குகின்றனர்.

இதனால் ஆத்திரமடைந்துள்ள பௌத்த பிக்குகள் சிலரும் பௌத்த சிங்களத் துவேசிகளும் நாட்டின் அமைதியைக் குலைக்க முற்பட்டிருப்பதை உணர முடிகின்றது.

கூடவே அரசியல் தோல்விகளைச் சந்தித்த சிங்கள அரசியல்வாதிகளும் இதற்குத் தூபமிடுகின்றனர்.

ஆம், நாட்டில் அமைதியைக் குலைத்து அதன்மூலம் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவின் ஆட்சிக்கு முடிவு கட்டுவது, தமக்கு ஏற்பட்ட அரசியல் இழப்புகளுக்கு பரிகாரம் தேடுவது என நீண்டதொரு நிகழ்ச்சி நிரலை அரங்கேற்றும் திட்டங்களும் தயார் நிலையில் உள்ளன.

இதனை ஒட்டுமொத்தமாக நிறைவேற்றுவதற்கு மீண்டும் நாட்டில் இனக் கலவரத்தை ஏற்படுத்த பௌத்த சிங்களப் பேரினவாதம் சிந்திப்பதன் அறிகுறிகள் ஆங்காங்கே தென்படுகின்றன என்பதை இங்கு கூறித்தானாக வேண்டும்.

# வறட்சியைக் கருத்திற் கொண்டு நீரை சிக்கனமாகப் பயன்படுத்துக

## யாழ்.மாவட்ட அரச அதிபர்

(யாழ்ப்பாணம்)

தற்போதுள்ள அனர்த்த நிலைமையினை கருத்தில் கொண்டுயாழ்ப்பாணத்தில் நீரை சிக்கனமாக பயன்படுத்துங்கள் என யாழ்.மாவட்ட அரசாங்க அதிபர் ஆ.சிவபாலசுந்தரன் தெரிவித்தார்.

யாழ்ப்பாண மாவட்டத்தில் தற்போதைய வறட்சி நிலைமைகள் தொடர்பில் கருத்து தெரிவித்த போது மேற்கண்டவாறு தெரிவித்தார். அவர் மேலும் தெரிவிக்கையில்,

தற்போதைய நிலைமையின்படி 22,000 குடும்பங்கள் வரை யாழ்ப்பாண மாவட்டத்தில்வறட்சியினால் பாதிக்கப்பட்டுள்ளார்கள்.

அதில் சுமார் 8000 குடும்பங்களை சேர்ந்த மக்கள் குடிநீர் தட்டுப்பாட்டை எதிர்நோக்கிக் கொண்டிருக்கின்றார்கள்.

குறிப்பாக நெடுந்தீவு, ஊர்காவற்துறை, சாவகச்சேரி, மருதங்கேணி, சங்கானை போன்ற பிரதேச செயலக பிரிவுகளில் இந்த குடிநீர் பற்றாக்குறை அல்லது மிக வறட்சியான நிலைமை காணப்படுகின்றது.

இந்த பகுதிகளுக்கு அனர்த்த முகாமைத்துவ சேவை நிலையத்தின் ஊடாக, அந்த திணைக்களத்தினுடைய அனுசரணையுடன் குடிநீர் வழங்குவதற்கான நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது.

அதேபோல தொடர்ச்சியாக மாவட்டத்தில் இருக்கக்கூடிய இந்த நிலைமை நீடிக்குமாக இருந்தால் சில வேலைகளில் இன்னும் துரிதமாக நடவடிக்கை எடுக்க வேண்டிய நிலைமை ஏற்படும்.

இதற்கு ஏற்றாற் போல் விரைவில் சம்பந்தப்பட்ட திணைக்களங்களை அழைத்து ஒரு அனர்த்த முகாமைத்துவம் தொடர்பான ஒரு விசேட கூட்டம் ஒன்றினை நடாத்துவதற்கு தீர்மானித்துள்ளோம்.

எனவே தற்போதுள்ள அனர்த்த நிலைமைகளை கருத்தில் கொண்டு யாழ்ப்பாணத்தில் நீரைச் சிக்கனமாக பயன்படுத்துவதற்கு பொதுமக்கள் முன்வர வேண்டும்.

அதேபோல விவசாயத்தால் பாதிக்கப்படுகின்ற மக்கள் சம்பந்தமாகவும், அதேபோல்வறட்சியின்மூலமாக அன்றாடம் தொழில் இழந்துள்ளோர் தொடர்பிலும் விபரங்களை சேகரித்து அவர்களுக்கு ஏதாவது நிவாரணம் அரச நிறுவனங்கள் அல்லது அரசசார்பற்ற நிறுவனங்கள் ஊடாக உதவிகளை வழங்குவதற்காக விரைவான ஒரு கூட்டத்தினை கூட்டவுள்ளோம் என்றார். (ம-7,33,104)

## குளவி கொட்டியதில் குடும்பஸ்தர் மரணம்

திருகோணமலை - வெருகல் மாவடிச்சேனை கிராமத்தில் குளவிக் கொட்டுக்கு இலக்காகி இளம் குடும்பஸ்தர் ஒருவர் உயிரிழந்ததாக ஈச்சிலம்பற்று பொலிஸார் தெரிவித்தனர்.

வெருகல் - மாவடிச்சேனை கிராமத்தில் வசிக்கும் அழகுவேல் இராசகுமார் (வயது 30) என்ற இளம் குடும்பஸ்தரே இவ்வாறு உயிரிழந்துள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

நேற்று முன்தினம் பனைமரத்தில் ஏறி பனை ஓலை வெட்டியபோது அதில் இருந்த குளவிக்கூடு கலைந்து கொட்டியதாகவும், சிகிச்சைக்காக கதிரவெளிவைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்ட நிலையில் மேலதிக சிகிச்சைகளுக்காக மட்டக்களப்பு வாழைச்சேனை வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டபோதும் சிகிச்சை பலனின்றி உயிரிழந்துள்ளதாகவும் தெரிவிக்கப்படுகின்றது. (ம-7)

நலன்புரி திட்டத்தின்

## ஜூலை மாத கொடுப்பனவுகள் வெள்ளிக்கிழமை முதல்

(கொழும்பு)

ஜூலை மாதத்திற்கான சிறுநீரக நோயாளர்கள், விசேட தேவையுடையோர் மற்றும் குறைந்த வருமானம் பெறும் வயோதிபர்களின் நலன்புரிக் கொடுப்பனவுகளுக்கான 2,684 மில்லியன் ரூபாய் நிதி அனைத்து மாவட்ட செயலகங்களுக்கும் திறைசேரியால் வழங்கப்பட்டுள்ளது.

நிதி இராஜாங்க அமைச்சர் ஷெஹான் சேமசிங்க தனது உத்தியோகபூர்வ டுவிட்டர்கணக்கில்இதனை பதிவிட்டுள்ளார்.

இதன்படி முதியோர் கொடுப்பனவை தபால் நிலையங்களிலும் விசேட தேவையுடையோர் மற்றும் சிறுநீரக நோயாளர்களுக்கான கொடுப்பனவுகளை,பிரதேச செயலகங்களில் இருந்தும் எதிர்வரும் வெள்ளிக்கிழமை முதல் பெற்றுக்கொள்ள முடியும் என நிதி இராஜாங்க அமைச்சர் குறிப்பிட்டுள்ளார். (ம-7)

## இந்த ஆண்டில் இதுவரையில் 370 படுகொலைகள் பதிவு

### டலஸ் எம்.பி தெரிவிப்பு

(கொழும்பு)

இலங்கையில் இந்த ஆண்டில் இதுவரையில் 370 படுகொலைச் சம்பவங்கள் பதிவாகியுள்ளதாக பாராளுமன்ற உறுப்பினர் டலஸ் அழகப்பெரும தெரிவித்துள்ளார்.

கடந்த ஜனவரி மாதம் முதல் இதுவரையில் மாதாந்தம் 40 முதல் 50 வரையிலான படுகொலைகள் இடம்பெற்றுள்ளதாக அவர் தெரிவித்துள்ளார்.

நாடு அராஜக நிலைக்கு தள்ளப்பட்டுள்ளதாகவும் நாகரிகமற்ற மனித சமூகம் வாழும் நாடாக மாறியுள்ளது எனவும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

போதைப்பொருள் வியாபாரம், காணிப் பிரச்சினை, தகாத உறவு போன்ற காரணிகளினால் இடம்பெறும் மனித படுகொலைகளை தடுக்க அரசாங்கம் எடுத்துள்ள நடவடிக்கை என்ன என அவர் கேள்வி எழுப்பியுள்ளார்.

இதேவேளை, போதைப் பொருள் பிரச்சினைக்கு தீர்வு காணும் நோக்கில் விரிவான திட்டமொன்று முன்னெடுக்கப்படுவதாக அரசாங்கம் இந்த குற்றச்சாட்டுக்கு பதிலளித்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (நி)

## யாழ்.இந்திய துணைத் தூதரகத்தின் ஏற்பாட்டில் சிறப்புப் பட்டிமன்றம்

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் இந்திய துணைத் தூதரகத்தின் ஏற்பாட்டில் இந்தியாவின் பட்டிமன்றப் பேச்சாளர்கள் மற்றும் உள்ளூர்ப் பட்டிமன்றப் பேச்சாளர்கள் இணைந்து பங்குகொள்ளும் சிறப்புப் பட்டிமன்றம் நாளை வெள்ளிக்கிழமை மாலை 6 மணிக்கு யாழ்ப்பாண கலாசார மத்திய நிலையத்தில் இடம்பெறவுள்ளது.

நவீன தொழில்நுட்பங்களின் வரவு வரமே! வரமல்ல! எனும் தலைப்பில் இடம்பெறவுள்ள இப் பட்டிமன்றத்தின் நடுவராக எஸ்.ராஜா செயற்படவுள்ளார்.

மேலும் வரமே எனும் தரப்பில் திருமதி.பாரதி பாஸ்கர், ச.லலீசன், ந.ராஜன் மற்றும் ஸ்ரீ.சிவஸ்கந்தஸ்ரீ வாதிடவுள்ளனர்.

வரமல்ல எனும் தரப்பில் பேராசிரியர் ஸ்ரீ.பிரசாந்தன், ந.விஜயசுந்தரம், செல்வி.இ.ஹார்த்தியாயினி மற்றும் ஜ.யோகநாதன் ஆகியோர் வாதிடவுள்ளனர். (4-6)

## மின்சாரம் தடைப்படும்

உயர் அழுத்த மற்றும் தாழ் அழுத்த மின் விநியோக மார்க்கங்களின் கட்டமைப்பு மற்றும் பராமரிப்பு வேலைகளுக்காக நாளை வெள்ளிக்கிழமை காலை 8.30 மணியிலிருந்து மாலை 5.00 மணிவரை **வவுனியா பிரதேசத்தில்** மகாறம்பைக்குளத்தில், மின்சாரம் தடைப்படும்.

## அதிர்ஷ்டசாலிகள் தெரிவு

(யாழ்ப்பாணம்)

வடமராட்சி செவிப்புல னற்றோர் விளையாட்டுக் கழகத்தால் 10வது ஆண்டு நிறைவு விழாவை முன்னிட்டு வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்களுக்கிடையிலான ஆண்களுக்கான உதைபந்தாட்டம், துடுப்பாட்டம் மற்றும் பெண்களுக்கான வலைப்பந்தாட்டம் எதிர்வரும் 08,09,10 ஆகிய தினங்களில் நடாத்த இருப்பதனால் அதற்கான நிதி உதவிக்காக 2023.08.20 அன்று மேற்கொள்ளப்பட்ட அதிர்ஷ்ட இலாப சீட்டிழுப்பின் அடிப்படையில் 2063, 1832, 4247 ஆகிய இலக்கங்கள் முறையே முதல் மூன்று அதிஷ்டசாலிகளாகவும் 3005,6144,210,6735, 2821 ஆகிய ஐந்து இலக்கங்கள் ஆறுதல் பரிசினை பெறும் அதிஷ்டசாலிகளாகவும் தெரிவுசெய்யப்பட்டுள்ளனர்.

குறிப்பிட்ட இலக்கத்திற்குரிய அதிஷ்டசாலிகள் 074 237 7686 எனும் இலக்கத்தில் 2023.08.31 திகதிக்கு முன்னர் தொடர்பு கொள்ளுமாறு அறிவிக்கப்பட்டுள்ளது. (ம-7)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இலங்கைப் பொருளாதார நெருக்கடியும் கடன் மறுசீரமைப்பும் ஒரு தொகுப்பு

14



கலாநிதி க.தவலிங்கம்
ஓய்வுநிலை நில அளவையாளர் நாயகம்.
தவிசாளர்- எல்லை நிர்ணய ஆணைக்குழு.

**பணவீக்கத்தின் வகைகள்**

பணவீக்கத்தின் தீவிரத் தன்மையின் அடிப்படையில் மூன்றாக வகைப்படுத்தி உள்ளனர்.

**1. மிதமான பணவீக்கம்**

தவழும் பணவீக்கம் என்பது மிக மெதுவான அல்லது குறைவான விகிதத்தில் பணவீக்கம் விகிதம் இருப்பதாகும்.

மக்களால் நீண்டகாலத்துக்கு விலைவாசி உயர்வை உணர முடியாமல் இருக்கும் பணவீக்கத்தை தவழும் பணவீக்கம் என கூறலாம்.

இவ்வகை பணவீக்கத்தால் ஒரு நாட்டின் பொருளாதாரத்துக்கு ஒரு பாதிப்பும் ஏற்படாது. இவ்வகை பணவீக்கம் மிதமான பணவீக்கம் என்று கூறப்படுகிறது. மேலும் பொருட்களின் விலை ஏற்றம் மிதமானதாக இருப்பதை நடக்கும் பணவீக்கம் எனவும் கூறுகின்றனர். பணவீக்கத்தின் ஆண்டு விகிதம் ஒற்றை எண்ணாய் (உ+ம 5%) உயரும். இவ்வகை பணவீக்கம் ஓடும் பணவீக்கமாக மாறும் முன் அரசுக்கு ஒரு முன்னெச்சரிக்கையாக இருக்கும்.

**2. வேகமான பணவீக்கம்**

ஆண்டிற்கு பொருட்களின் விலை ஏற்றம் 10 விகிதத்துக்கு மேல் இருக்கும் பணவீக்கம் வேகமான பணவீக்கம் அல்லது ஓடும் பணவீக்கம் எனப்படுகிறது .10 முதல் 20 விகிதமாக பொருட்களின் விலை உயர்வு இருக்கும். ஓடும் பணவீக்கத்தில் பொருட்களின் விலை மிக உயர்வாக இருக்கும். அரசு முக்கிய நிதி மற்றும் பொருளாதார திட்டங்களை செயற்படுத்தாவிட்டால் இவ்வகை பணவீக்கம் தாவும் பணவீக்கத்திற்கு வழி வகுத்து விடும். இப் பணவீக்கம் சில சமயங்களில் மூன்று இலக்கங்கள் வரை உயருகிறது.

**3. உயர் பணவீக்கம்** (Hyper Inflation):

பணவீக்கத்தின் அளவு கட்டுக்கடங்காமல் பணவீக்க அளவீட்டில் பல இலக்கங்களுக்கு அதீதமாக அதிகரிப்பதே உயர் பணவீக்கம் அல்லது மிகைவேகப் பணவீக்கம் எனப்படுகிறது. இவ்வகை ஒவ்வொரு நாளும் விலைமட்டம் வரம்பின்றி உயர்ந்து கொண்டே செல்லும். இப் பணவீக்கம் ஒரு நாட்டின் பொருளாதர்ரத்திற்கு மிகவும் ஆபத்தான விளைவுகளை ஏற்படுத்தும். நாட்டின் பொருளாதாரம் கவிழும் சூழல் உருவாகும். நாணயத்தின் வாங்கும் திறன் தொடர்ந்து வீழ்ச்சி அடையும்.

முதல் உலகப் போருக்குப் பிறகு ஜேர்மனியும் இரண்டாம் உலகப் போருக்குப் பின் ஹங்கேரியும், சீனாவும் இத்தகைய பண வீக்கத்தைக் கண்டன. இந்த சூழ்நிலையில் விலையானது அதிக வேகமாகவும் அதிக அளவிலும் உயர்ந்து கொண்டே சென்றது. மலிவுப் பண்டங்களுக்குப் கூட அதிக விலை கொடுக்க வேண்டியிருந்தது. பணம் பயனற்றதாகவும், புதிய பணம் அறிமுகப்படுத்த வேண்டிய நிலை வந்தது. இவ்வாறு அந் நாடுகளில் மிகை வேகப் பணவீக்கம் ஏற்பட்டது.

ஒரு பொருள் அதிகமாக உற்பத்தி செய்யப்பட்டால், தேவைக்கு அதிகமான உற்பத்தி இருந்தால், அந்தப் பொருளின் மதிப்பு குறையும். அதேபோல அதிகளவில் பணத்தை அச்சிட்டு வெளியிட்டால் பணவீக்கம் ஏற்படும். இதற்கு உதாரணமாக வெனிசுலா நாட்டை எடுத்துக் கொள்ளலாம். வெனிசுலா நாட்டு அரசு அதிகளவில் பணத்தை அச்சடித்து வெளியிட்டது. அதன் காரணமாக வெனிசுலா பணத்தின் மதிப்பு குறைந்து அதிகபடியான பணவீக்கத்திற்கு வித்திட்டது. இதன் காரணமாக வெனிசுலாவின் பொருளாதாரம் மிகவும் மோசமான நிலைக்குச் சென்றது.

நமது தேவைக்கும் குறைவாக ஒரு பொருள் உற்பத்தி செய்யப்பட்டால் அப்போதும் பணவீக்கம் ஏற்படும். பணம் என்பது நமது தேவைகளை நாம் நிறைவேற்றிக்கொள்ள நாம் பயன்படுத்தக்கூடிய ஒரு சாதனம். நம்முடைய தேவை இருக்கும் அளவுக்கு உற்பத்தி இல்லை என்றால், நமது தேவையை பூர்த்தி செய்ய அதிகபடியான பணத்தைக் கொடுத்து அந்தப் பொருளை வாங்க முயல்வோம். அதனால் ஒரு பொருளின் விலை உயர்ந்து பணத்தின் மதிப்பு குறைகிறது. இதனாலும் பணவீக்கம் ஏற்படுகிறது. மேற்கூறிய இரண்டு நிலைமைகளினாலும் பணவீக்கம் ஏற்படுகிறது. அதாவது பணப்புழக்கம் அதிகமாக இருக்கும்போதும் தேவைக்கும் குறைவாக உற்பத்தி இருக்கும்போதும் பணவீக்கம் ஏற்படும். மேலும் பொருள் இறக்குமதியில் தங்கியிருக்கும் நாடுகளில் நாணயத்தின் மதிப்பின் தேய்மானமும் பணவீக்கத்தை ஏற்படுத்தும்.

**அமுக்கிய பணவீக்கம்**

விலைமட்ட அதிகரிப்பு என்பது பண வீக்கத்தின் வெளிப்பாடாக மட்டுமே அமையும். விலைமட்ட அதிகரிப்பு இல்லாத சூழ்நிலையிலும் கூட பொருளாதாரத்தில் பணவீக்கம் நிலவுமாயும், அரசாங்கத்தினால் கைக்கொள்ளப்படுகின்ற கடுமையான விலைக்கட்டுபாடுகள். பங்கீட்டு முறைகள் என்பவற்றின் மூலம் விலைமட்டத்தில் ஏற்படுகின்ற அதிகரிப்புகள் கட்டுப்படுத்தப்படுகின்றன. ஆனால் பணவீக்க விளைவுகள் காணப்படும். பொருட்கள் சேவைகளின் விலை குறைவு ஆயினும் அதற்கேற்ப அவற்றை நுகரமுடியாத நிலை காணப்படும். அந்நிலையில் பொருளாதாரத்தில் பணவீக்கம் மறைத்து வைக்கப்பட்டுள்ளது எனக் கூறப்படும். எனவே இதனை அமுக்கிய பணவீக்கம் என அழைப்பர்.

**பணவீக்கம் ஏற்பட பொதுவான காரணங்கள்**

பணவீக்கங்கள் வெவ்வேறாக வகைப்படுத்தப்படுகின்றன. அவை பற்றாக்குறை திட்டத்தால் தூண்டிவிடப்படும் பணவீக்கம், செலவு உந்து பணவீக்கம், இலாப உந்து பணவீக்கம், போர்க்கால பணவீக்கம், போருக்கு பின்னர் ஏற்படும் பணவீக்கம் ஆகும்.

- பற்றாக்குறை திட்டத்தால் தூண்டிவிடப்படும் பணவீக்கம்:

அரசானது நாட்டின் வரவிற்கு மேல் செலவுகளை மேற்கொள்ளும் போது பற்றாக்குறை ஏற்பட்டு பணவீக்கம் ஏற்படுகிறது.

- செலவு உந்து பணவீக்கம் (Cost Push Inflation)

செலவு உந்து பணவீக்கம் செலவு உயர்வதால் ஏற்படுவது, இத்துடன் கூலி உயர்வும் சேர்ந்து உற்பத்தி செலவு அதிகரிப்பதால் தோன்றுகிறது. கூலி உயர்வும், மற்ற உற்பத்தி செலவுகளும் சேர்ந்து விலையை அதிகரிக்கச் செய்கிறது. கூலி மற்றும் விலை உயர்வு காரணிகளால் ஏற்படும் பணவீக்கத்தைகூலி உந்து பணவீக்கம், விலை உந்து பணவீக்கம் என்றும் கூறுகின்றோம்.

- இலாப உந்து பணவீக்கம் (Profit Push Inflation):

தொழில் முனைவோர்கள் இலாபத்தை அதிகரிப்பதற்காக ஏற்படுத்தும் பணவீக்கம்.

- போர்க்கால பணவீக்கம்:

அரசானது போருக்காக செலவிடும் பணத்தால் எந்தவிதமான உற்பத்தியும் இல்லாததால் ஏற்படும் பணவீக்கம்.

- போருக்கு பின்னர் ஏற்படும் பணவீக்கம்:

அரசானது போருக்கு பின்னர் பொருளாதாரத்தை கட்டுப்படுத்தாத நிலையில் ஏற்படும் பணவீக்கம்.

பொதுவாக போர்க்காலங்களிலும், அதற்கு பின்பும் பணவீக்கம் ஏற்படக்கூடும். போர்க்காலங்களில் மக்களின் வருமானம் அதிகரித்தும் அதற்கேற்ப பொருட்கள் உற்பத்தி செய்யப்படாமல், பற்றாக்குறை ஏற்பட்டு பொருட்களை பங்கீடு செய்தலில் கட்டுப்பாடு ஏற்படும். மேலும், சேமிக்கக் கட்டாயப்படுத்தப்பட்ட மக்கள் தற்போது அதிகமாக செலவு செய்வார்கள். இதனால் எல்லாவகையான பொருட்களுக்கும் அதிக வேகமாக தேவை அதிகரிக்கும்.

ஆனால் அதே வேகத்தில் அளிப்பு (supply) அதிகரிப்பதில்லை. இதனால் பணவீக்கம் ஏற்படுகிறது. போரில் வெற்றியடைய அரசு விரும்புவதால், அதிலும் தற்கால போர்கள் அதிக செலவுடையதாக இருப்பதால், இதனை சந்திக்க அரசு பற்றாக்குறை நிதியாக்கத்தை மேற்கொள்ள வேண்டியுள்ளது. இது மேலும் மேலும் பணவீக்கத்தை அதிகரித்துக் கொண்டே செல்லும்.

அதாவது விலையேற்றம் அதிக விலையேற்றத்தை ஏற்படுத்துகிறது. விலையேற்றத்தால் தொழிலாளர்கள் அதிக கூலியை கோருவார்கள். அதிக கூலி அதிக செலவை ஏற்படுத்தும். அதிக செலவு மேலும் விலையை உயர்த்தும். இவ்வாறாக ஒரு 'நச்சுச் சுழல்' உருவாக்கப்படுகிறது. கூலி விலையேற்றத்தை ஏற்படுத்துகிறது. விலையேற்றம் கூலியை உயர்த்துகிறது. இதுவே பணவீக்க சுழற்சி எனப்படுகிறது.

மேலும் சம்பள அதிகரிப்பானது, நாட்டில் உற்பத்தி செய்யப்படும் பொருட்கள் மற்றும் சேவைகளுக்கான உற்பத்திச் செலவில் அதிகரிப்பை ஏற்படுத்தி, சர்வதேச சந்தையில் இலங்கை நாட்டின் பொருட்கள் மற்றும் சேவைகளுக்கான கேள்வியை குறைத்து விடும்.

இதனால் மற்றைய நாடுகளுடன்போட்டி போட முடியாத நிலைக்கு தள்ளப்படும். இதன் மூலம் கிடைத்து வந்த ஏற்றுமதி வருமானம் குறைந்து நாட்டின் கட்டண இருப்பு நிலை மற்றும் வர்த்தக பற்றாக்குறைக்கு வழிகோலும்.

இப்பற்றாக்குறைகளைக் குறைக்க மற்றைய பணவீக்கம் குறைந்த நாடுகளுடன் சர்வதேச சந்தையில் போட்டி போட ரூபாயை மதிப்பிறக்கம் செய்ய நேரிடும். இதன் மூலம் மீண்டும் பணவீக்கம் உயர்ந்து மக்களின் வாழ்க்கைச் செலவில் அதிகரித்த தாக்கத்தை செலுத்தும்.

பற்றாக்குறை நிதியாக்கம் பணவீக்கத்திற்கு ஒரு முக்கிய காரணமாகும். திட்டமிடுதலை கொண்ட வளர்ச்சி குறைந்த நாடுகளில் இத்தகைய பணவீக்கத்தைக் காணலாம். வணிக சூழலின் செழுமை காலங்களில் கூட பணவீக்கம் ஏற்பட வாய்ப்புண்டு. (தொடரும்..)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சந்திரயான் 3...

பார்த்த அவர் பின்னர் நாட்டு மக்களுக்கு உரையாற்றினார்.

நிலவின் தென் துருவத்தில், இதுவரை யாரும் ஆய்வு செய்யாத இடத்தில், தடம் பதிக்க இந்தியா முயற்சி மேற்கொண்டு, கடந்த மாதம் 14ஆம் திகதி சந்திரயான்-3 விண்கலம் அனுப்பப்பட்டது.

பூமிக்கும், நிலவுக்கும் இடையேயுள்ள 3 லட்சத்து 84 ஆயிரம் கி.மீ. தொலைவை 40 நாட்கள் பயணித்து கடக்கும் திட்டத்துடன் புறப்பட்ட சந்திரயான் - 3, முதலில் புவி வட்டப்பாதையில் பல்வேறு நிலைகளில் சுற்றிவந்து, பிறகு நிலவு நோக்கி பயணித்து, அதன் வட்டப்பாதைக்கு மாற்றப்பட்டது.

நிலவு வட்டப்பாதையில் சுற்றிகொண்டிருக்கும் சந்திரயான்-3 விண்கலத்தில் உள்ள உந்துகலனில் இருந்து லேண்டர் கருவி வெளியே கொண்டுவரப்பட்டு, அதே வட்டப்பாதையில் சுற்றிக்கொண்டே நிலவை நெருங்கி சென்றது.

இந்நிலையில் தற்போது விக்ரம் லேண்டர் சந்திரனின் தென் துருவத்தில் வெற்றிகரமாக தரையிறங்கியது. (ம-7)

## முல்லை...

மன்ற உறுப்பினர் எம்.ஏ.சுமந்திரன் வலியுறுத்தினார்.

முல்லைத்தீவு நீதிபதி தொடர்பாக நேற்று முன்தினம் சரத் வீரசேகரவினால் தெரிவிக்கப்பட்ட சர்ச்சைக்குரிய கருத்து தொடர்பாக, நேற்று பாராளுமன்றில் உரையாற்றியபோதே அவர் இவ்வாறு குறிப்பிட்டார்.

இவ்விடயம் தொடர்பாக அவர் மேலும் தெரிவிக்கையில், "பாராளுமன்ற உறுப்பினர் சரத் வீரசேகர, முல்லைத்தீவு நீதவான் நீதிமன்ற நீதிபதி மனநலம் பாதிக்கப்பட்டவர் என தெரிவித்திருந்தார்.

அத்தோடு, அவரது மனைவி தொடர்பாகவும் அவர் குறிப்பிட்டிருந்தார்.

இது நிலையியற் கட்டளை 83ஐ மீறும் செயற்பாடாகும். எவருடைய தனிப்பட்ட விடயங்கள் தொடர்பாகவும் சபையில் கருத்து வெளியிட முடியாது.

இவ்வாறு இருக்கும்போது, சரத் வீரசேகர கருத்து வெளியிடுவது இது இரண்டாவது தடவையாகும்.

ஏற்கெனவே, அவர் சட்டத்தரணிகள் சங்கத்தையும் என்னையும் கடுமையாக விமர்சித்திருந்தார்.

நான் பாராளுமன்றில் எந்தவொரு நீதிபதியையும் பெயர் குறிப்பிட்டு கருத்து வெளியிடவில்லை.

நீதிபதிகளின் கருத்துக்கள் தொடர்பாக விமர்சிக்கலாமே ஒழிய, நீதிபதியின் தனிப்பட்ட விகாரம் குறித்து பேச முடியாது.

ஒரு தமிழ் நீதிபதி எப்படி தன்னை விமர்சிக்க முடியும் எனும் தொனியில் தான் அவர் கருத்து வெளியிட்டிருந்தார். இது பாரதூரமான விடயமாகும்.

ஒரு பாராளுமன்ற உறுப்பினரின் நடத்தைக்கு உரிய வகையில் அவர் நடந்து கொள்ளவில்லை.

எனவே, சபாநாயகர் இவருக்கு எதிராக உரிய நடவடிக்கைகளை எடுக்க வேண்டும்" என அவர் மேலும் தெரிவித்துள்ளார். (ம-7)

## அடுத்த வருடம்...

ஊடகங்களுக்கு கருத்துத் தெரிவிக்கும்போதே மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

அடுத்த வருடம் தேர்தல் ஆண்டாகவே இருக்கும் என நான் நினைக்கின்றேன். இப்போது எம்மை விமர்சித்து வீரவசனம் பேசுவோர் தேர்தல் காலங்களில் தோல்வியடைந்தே போவார்கள் என ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தெரிவித்தார்.

தேர்தலை நடத்த அரசு அஞ்சவில்லை. நாடு பொருளாதாரத்தில் வீழ்ச்சியடைந்து இருக்கும்போது தேர்தலை எப்படி நடத்துவது? நாடு இப்போதுதான் மெல்ல மெல்ல மீண்டெழுந்து வருகின்றது. இந்த உண்மை நிலை எதிர்க்கட்சிகளுக்கு விளங்கும்.

பெரும்பாலும் அடுத்த வருடம் தேர்தல் வருடமாகவே இருக்கும் என நான் நினைக்கின்றேன். எந்தத் தேர்தல் முதலில் நடைபெறும் என்று இப்போது கூற முடியாது. ஆனால், அடுத்த வருடம் தேர்தல் ஆண்டு என்பது நிச்சயம்.

இப்போது எம்மைக் கண்டபடி விமர்சித்து அரசியல் மேடைகளிலும், ஊடகங்கள் முன்னிலையிலும் வீரவசனம் பேசுவோர் தேர்தல்காலங்களில் தோல்வியடைந்தே போவார்கள். மக்களை அவர்கள் முட்டாளாக்க முடியாது என குறிப்பிட்டார். (ம-7)

## வடக்கின்...

வடமாகாண ஆளுநர் பி.எஸ்.எம். சார்ள்ஸை நேற்று ஆளுநர் அலுவலகத்தில் சந்தித்தபோதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

வடமாகாணத்தின் தற்போதைய நிலைமைகள் குறித்து தூதுவருக்கு விளக்கமளித்த ஆளுநர், மீள்குடியேற்றம், விவசாயம், மீன்பிடி மற்றும் சுற்றுலா உள்ளிட்ட மக்களின் பொதுவான உட்கட்டமைப்புகள் தொடர்பில் அதிக கவனம் செலுத்துவதாக கூறினார்.

யுத்தம் நிறைவடைந்ததன் பின்னர், மக்களின் நல்வாழ்வுக்காக கடந்த சில வருடங்களாக அமுல்படுத்தப்பட்ட வேலைத்திட்டங்கள் குறித்த உண்மைகளை எடுத்துரைத்தார்.

வடக்கு மாகாண மக்களுக்காக திருமதி பி.எஸ்.எம்.சார்ள்ஸ் இரண்டாவது தடவையாக வடமாகாண ஆளுநராக நியமிக்கப்பட்டமை குறித்தும் அவருக்கு நல்வாழ்த்துக்களை அமெரிக்க தூதுவர் கூறியிருந்தார்.

மேலும் தற்போது வட மாகாணத்தின் அபிவிருத்தி செயற்பாடுகள் மற்றும் மக்களின் அன்றாட வாழ்க்கை செயற்பாடுகள் தொடர்பில் மகிழ்ச்சியடைவதாக தூதுவர் தெரிவித்தார். (ம-7,33,104)

## திரு...

தில் மேற்படி விகாரை கட்டப்பட்ட நிலையில் இடம்பெயர்ந்த நீலியம்மன் கோயில் சிறிய அளவில் வீதியோரத்தில் மீள் புனரமைக்கப்பட்டு இருந்தது.

2016 ஆம் ஆண்டு மேற்படி புதிய நீலியம்மன் ஆலயமும் தீயிடப்பட்டது.

இந்த ஆலய தீவைப்பு சம்பவம் தொடர்பாக விகாரையை சேர்ந்த ஒருவர் கைது செய்யப்பட்டு வழக்கு பதிந்து பிணையில் விடுவிக்கப்பட்டார்.

அதன் பின்னர் நீதிமன்ற வழக்கும் ஜனவரி 2019 இல் கைவிடப்பட்டது.

தற்போது பாசன பப்பாத ராஜமஹா விகாரையின் பிக்குவாக கடமையாற்றுபவர் மேற்படி விகாரைக்கு 2000 வருட கால வரலாறு இருப்பதாக உரிமை கோருகின்றார்.

குறித்த பகுதியும் தொல்லியல் திணைக்களத்திற்கு உரியது என்றும் அறிவிக்கப்பட்டு இருக்கின்றது.

இதை பயன்படுத்தி விகா

ரையை சூழவுள்ள பெருமளவு நிலப்பரப்பை ஆக்கிரமித்துள்ள பௌத்த பிக்கு புதிய கட்டுமானங்களையும் ஆரம்பித்து இருக்கின்றார். (ம-7)

## மன்னாரில்...

வேண்டும்என மன்னார்மாவட்ட வலிந்து காணாமல் ஆக்கப்பட்ட உறவுகளை தேடும் குடும்பங்களின் சங்க தலைவி மனுவல் உதயச்சந்திரா கோரிக்கை விடுத்துள்ளார்.

மன்னாரில் நேற்று புதன்கிழமை மதியம் இடம்பெற்ற ஊடக சந்திப்பில் அவர் இவ்வாறு தெரிவித்தார். (ம-7,285)

## ரணில்...

சாட்டினார்.

தனது நிகழ்ச்சி நிரலை நிறை வேற்றுவதற்காக சிறுபான்மை - பெரும்பான்மை இனங்களுக் கிடையில் வன்முறையைத் தூண்டக்கூடிய வகையில் கருத்துக்களை வெளியிடும் இனவாதிகளையும், அடாவடிக் குழுவினரையும் ஜனாதிபதி பயன்படுத்தி வருகின்றார் என்றும் அநுரகுமார எம்.பி. சுட்டிக்காட்டினார். (ம-7)


மெகா பவர்
திகதி 23/08/2023
சீட்டிழுப்பு இலக்கம் 1563
F 13 07 62 64 67
66516

தன நிதானய
திகதி -2023.08.23
சீட்டிழுப்பு இலக்கம் - 1245
G 02 05 10 53 G
18112

லக்கி 7
திகதி 23.08.2023
சீட்டிழுப்பு இலக்கம் 0041
L7 இலக்கம் 1 0
வெற்றி இலக்கினம்: தனுசு
வெற்றி இலக்கங்கள்: 9 2 9 4 6 0

கொவிசெத
சீட்டிழுப்பு இலக்கம் 3457
சீட்டிழுப்பு திகதி 23.08.2023
L 17 20 25 55
L
59935

ஹந்தஹன HANDAHANA
உத்தியோகபூர்வ முடிவுகள்
சீட்டிழுப்பு திகதி 2023.08.23
சீட்டிழுப்பு இலக்கம் 524
மேடம் 11 40 46 58 மேடம்

மஹஜன சம்பத
திகதி 2023/08/23
சீட்டிழுப்பு இலக்கம் 5215
X 8 9 9 3 5 9

SUPER BALL
சீட்டிழுப்பு வாரம் 2189 வர்ணம் சிவப்பு
சீட்டிழுப்பு திகதி 2023.08.23 தினம் புதன்கிழமை
51 59 64 70 V
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ. 62,671,364.40
SPECIAL NO 19064 960

சனிதா
திகதி 2023.08.23 வெற்றி வாரம் 4350
07 14 35 66 M
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ. 55,179,860.00
SPECIAL NO. 32045 325

ராசி
சீட்டிழுப்பு வாரம் 3901 வர்ணம் பச்சை
சீட்டிழுப்பு திகதி 2023.08.23 தினம் புதன்கிழமை
03 16 18 41
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ. 5,651,008/-
SPECIAL NO 67827 943

திகதி 23.08.2023 வெற்றி வாரம் 1365
W 30 03 29 48 64
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ. 431,546,204.20
67797 874
DLB தொலை பேசி: 011-2 333 546-47 Web: www.dlb.lk

ஜயோதா Jayoda
திகதி 2023.08.23 வெற்றி வாரம் 1950 வர்ணம் மஞ்சள்
17 18 40 59 E
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ. 45,609,995.20
SPECIAL NO. 38693 378

அத கோடிபதி ADA KOTIPATHI
புதன்கிழமை
வெற்றி வாரம்: 2010
சீட்டிழுப்பு திகதி: 2023.08.23
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ. 52,609,640/-
02 05 34 61 P
33568 246


Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

## காணி விற்பனைக்கு உண்டு

யாழ்ப்பாணம் நுணாவில் காப்பற் வீதி முகப்புடன் 20 பரப்புக் காணி விற்பனைக்கு உண்டு.

- A9 வீதியில் இருந்து கனகம்புளியடி சந்தி செல்லும் பிரதான காப்பெட் வீதி
- இரண்டு பரப்பாக பிரிக்கப்பட்ட நிலையில், மட்டுவில் மகாவித்தியாலயம் 1 Km தூரம்
- குடியிருப்பு சூழல் கொண்ட தொகுதி

(16823)

**077 638 5683, 076 755 8606**

## காணி விற்பனைக்கு

சுழிபுரம் கிழக்கு அத்தத்தான் கடைக்கு அண்மையில் பிரதான வீதியோரமாக 6 பரப்பு வளவு கிணற்றுடனும் சுழிபுரம் காட்டுப் புலத்தில் 10 பரப்பு காணியும் விற்பனைக்கு உண்டு

(16774)

**077 736 6699**

## வீடு விற்பனைக்கு

- கொக்குவில் மேற்கில் 3 அறைகளுடன் கூடிய வடக்கு வாசல் வீடு விற்பனைக்கு உண்டு.
- மருதனார்மடத்தில் 4 பரப்புக் காணி விற்பனைக்கு உண்டு.

(16814)

**076 105 6343**

## காணி விற்பனைக்கு உண்டு

யாழ்ப்பாணம் புத்தூரில் 8 பரப்பு காணி விற்பனைக்கு உண்டு நிலப்பரப்பு

- மெயின் றோட் முகப்புடன் காபற் வீதி.
- பருத்தித்துறை வீதி புத்தூர் சந்தியில் இருந்து 1 K மீற்றர் தூரம்
- நான்கு நான்கு பரப்பாக பிரிக்கப்பட்ட நிலையில்
- ஒரு பரப்பின் விலை (3 இலட்சம் ரூபாய்)
- நல்ல சூழல் நன்னீர் ஊற்று

(16823)

**076 057 0354, 076 826 0354**

## காணி விற்பனைக்கு உண்டு

யாழ்ப்பாணம் கீரிமலை சிவன் கோவில் முன்பாக 42 பரப்புக் காணி விற்பனைக்கு உண்டு.

- கீரிமலை நகுலேஸ்வரர் கோயிலில் இருந்து அளவெட்டி செல்லும் பிரதான காபெட் வீதி முகப்புடன்
- நகுலேஸ்வரர் மகா வித்தியாலயத்தில் இருந்து 250 m தூரம், நகுலேஸ்வரர் ஆலயம் 50 m தூரம், பிரதான பஸ்தரிப்பு நிலையம் 75 m தூரம்.
- செம்மண்காணி நன்நீர் ஊற்றுநிலம் வீடு கட்டுவதற்கும் வியாபார நிலையங்கள் அமைப்பதற்கும் உகந்த இடம் நல்ல சூழல்
- 3 பரப்பு ஆகவும் 2 பரப்பு ஆகவும் பிரிக்கப்பட்ட நிலையில் 18 அடி பாதையுடன் நிலப்பரப்பு
- பார்வையிடும் நேரம் : காலை 6.00 தொடக்கம் மாலை 6.00 மணி வரை

(16823)

தொடர்புகளுக்கு:- குரு

**077 874 3204, 077 288 0152, 077 076 0389**

## மரண அறிவித்தல்

பிறப்பு 06 - 03 - 1954



இறப்பு 22 - 08 - 2023

### சிதம்பரப்பிள்ளை பூபாலசிங்கம்

(ஓய்வுபெற்ற ஸ்ரீலங்கா ரெலிக்கொம் உத்தியோகத்தர் – யாழ்ப்பாணம்)

உடையார் வளவு கரவெட்டி மத்தி கரவெட்டியைப் பிறப்பிடமாகவும் முடக்காடு சாமியன் அரசடியை வசிப்பிடமாகவும் கொண்ட சிதம்பரப் பிள்ளை பூபாலசிங்கம் அவர்கள் 22.08.2023 அன்று இறைபதம் அடைந்துவிட்டார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான சிதம்பரப்பிள்ளை - பாறுபதி தம்பதியரின் அன்பு மகனும் காலஞ்சென்றவர்களான நடராசா - இரத்தினம் தம்பதியரின் மருமகனும் மலர்விழியின் அன்புக் கணவரும் ரிசாந்தி (பிரதேச சபை - பருத்தித்துறை), தாரணி, பாரத்(HNB அசூரன்ஸ் - யாழ்ப்பாணம்), பாணுசுதன்(கட்டார்) ஆகியோரின் அன்புத் தந்தையும் பார்த்தீபன்(ஓய்வுநிலை - உபபீடாதிபதி - கல்வியியல் கல்லூரி - வவுனியா) அன்பு மைத்துனரும் கமலாதேவி, கனகாம்பிகை, விசுவலிங்கம்(ஓய்வுநிலை ஸ்ரீலங்கா ரெலிக் கொம் -யாழ்ப்பாணம்), நேசமணி ஆகியோரது உடன்பிறவா சகோதரனும் திலீபன் (விரிவுரையாளர் - உயர் தொழில்நுட்ப நிறுவகம் - யாழ்ப்பாணம்), புவிகரன்(லண்டன்), அஞ்சனா ஆகியோரது மாமனாரும் அபிஷேக், சந்தோஷ், அக்சரா, அக்ஷயன், ஐஸ்வன்ஜா, அகன்ஜன் ஆகியோரது பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் 24.08.2023 இன்று காலை 8.00 மணியளவில் அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக் கிரியைக்காக சோனப்பு இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும். இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

முடக்காடு, சாமியன் அரசடி
கரவெட்டி.

தகவல்:
ப.கிரிகரன்(மருமகன்)

(16813)

## 4ஆம் ஆண்டு நினைவஞ்சலி

அமரர். ஆறுமுகம்
**இராமச்சந்திரன்**
(இளைப்பாறிய ஆசிரிய ஆலோசகர்)

| தவப்பேறு | திதி | சிவப்பேறு |
|---|---|---|
| 26.03.1953 | 24.08.2023 | 06.09.2019 |




எங்கள் குடும்பத்தின் ஆணிவேரே!
கண்மூடி முழிக்குமுன்னே எம்மை
கடந்து விட்டீர்கள்
என்றென்றும் எங்களுடன்
இணைந்திருப்பீர்கள்
என எண்ணிக் கனவுகள் கண்டிருந்தோம்
இடை நடுவில் எம்மைத் தவிக்க விட்டு
ஏன் மறைந்து விட்டீர்கள்!

'மாதுமை'
மருதனார்மடம்,இணுவில்

குடும்பத்தினர்

(16809)

## நான்காம் ஆண்டு நினைவுகளுடன்...



அமரர் கந்தப்பு
**கந்தசாமி**
(சூாலை முகாமையாளர் - இ.போ.ச பருத்தித்துறை)

என்றென்றும் உங்கள்
நினைவுகளைச் சுமந்தபடி
உங்கள் நிழலில் வாழும்

ஞானசாரியார் வீதி,
துன்னாலை மேற்கு,
கரவெட்டி.

குடும்பத்தினர்

(C-7120)

வங்கியில் அடகு வைத்த நகைகளை
மீட்க முடியவில்லையா? நாம் மீட்டுத்தருகின்றோம்

## ஆகாஸ் நகை மாடம்

யாழ்ப்பாணம், நெல்லியடி, பருத்தித்துறை, சாவகச்சேரி, கொடிகாமம், கிளிநொச்சி, மானிப்பாய், சுன்னாகம், அச்சுவேலி, சங்கானை வல்வெட்டித்துறை, உடுப்பிட்டி, முல்லைத்தீவு, வவுனியா, மன்னார் ஆகிய பகுதிகளில்

வங்கியில் அடகு வைக்கப்பட்ட அடகு நகைகளை நகைக்கேற்ப பெறுமதியைப் பார்த்து வங்கியிலேயே பணத்தைத் தந்து வாங்கப்படும். (16759)

**076 825 7716** (ஆகாஸ்)

## பணியாளர் தேவை

கிளிநொச்சியில் இயங்கும் குரு காட்வெயர் நிறுவனத்திற்கு கீழ் குறிப்பிடப்படும் பணியாளர்கள் தேவை.

- ☐ மனேஜர் Lanka Tile Showroom
  ஆண்; சிங்களம், ஆங்கிலம் தெரிந்தவர்
- ☐ Lanka Tile விற்பனையாளர் ஆண்
- ☐ விற்பனைப் பிரதிநிதி சீமெந்து ஆண்
- ☐ கணக்குப்பதிவாளர் ஆண்/ பெண்

மேற்படி பணிகளுக்கு ஆட்கள் தேவை.
தங்களின் தகைமைச் சான்றிதழ்களுடன் நேரில் சமூகம் அளிக்கவும். சம்பளம் நேரில் பேசித் தீர்மானிக்கப்படும்.
குறிப்பு: நிறுவனத்தில் இருந்து 5 km சுற்றளவு தூரத்தில் இருப்பவர்கள் விரும்பத்தக்கது.
பல்கலைக்கழக பட்டப்படிப்பு முடித்தவர்களும் விரும்பத்தக்கது.

(C-7075)

**குரு காட்வெயர்**
இல.175, கரடிப்போக்குச் சந்தி, கிளிநொச்சி.
**077 743 5265**

## வலம்புரி

விளம்பரத் தொடர்புகளுக்கு

**076 636 3378, 076 097 3127**

இப்பத்திரிகை வலம்புரி நியூஸ் பேப்பர் (பிறைவேற்) லிமிட்ரெட் ஸ்தாபனத்தாரால் இல.191, பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 24.08.2023 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org